# திருக்கோயில்

ஜூன் 1992

விலை ரூ. 3





இந்தியத் தொழிற் சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த நம் இந்து சமய அறநிலையத்துறை அரங்கிற்கு மிகச் சிறந்த முறையில் காட்சி விளக்கம் செய்யப்பட்டிருந்தமைக்காக முதற்பரிசு வழங்கப் பெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திருமிகு பீஷ்ம நாராயண சிங் அவர்கள் பரிசினை வழங்க அறநிலையத் துறையின் இணை ஆணையாளர் திரு ந. ச. இராமச்சந்திரன், பி.ஏ.பிஎல்., அவர்கள் பரிசினைப் பெற்றுக் கொள்கிறார்கள். அறநிலையத் துறையின் சென்னை துணை ஆணையாளர் திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்., அவர்கள் உடன் உள்ளார்கள்.



முகப்பு:
ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர் :
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை. 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆங்கீரச ஆண்டு ஆனி<br>ஜூன் 1992 விலை ரூ. 3-00 | மணி: 6 |
|---|---|---|

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே ! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் உள்ளம்
— திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

தெய்வச் சேக்கிழார்
— மு. கிருட்டிணன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

சித்திரபாரதம்
— செவ்வேள்

தென்புளிகை திருத்தலச்சிறப்பு
— புளியரை கணேசன்

திருக்குட நீராட்டு விழா கண்ட நாகர்கோவில் அருள்மிகு நாகராஜர் ஆலயம்
— டாக்டர் எஸ். பத்மநாபன்.

ஆடல்காணீரோ திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

வளர்ந்துவரும் வடஅமெரிக்கா முருகன்கோயில்
— அருள்முருக சௌந்தரராஜ அடிகளார்

இருவினை ஒப்பு
— அன்பு அருணாசல அடிமை

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

புல்லாங்குழல்
— ஞானச்சேரி ஞானங்கள்

அருளாளர்களின்

# அருள் அனுபவம்



திருமந்திரச் செம்மல்
டி. வி. வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009.

## ''நின் பெருமையினால் பொறுப்பவனே'' (12)



'திருமந்திரச் செம்மல்'
**திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.**

அறியாமையின் காரணத்தால் உலக வாழ்க்கையே மெய்யெனக் கொண்டு, உடலையும், உள்ளத்தையும், சிந்தனைகளையும் வினைக்கு ஆளாக்கி, அறம், பாவம் என்கிற கயிற்றால் கட்டுண்டு திரியும் நிலையை சிறுமை என்று கூறிய மணிவாசகப் பெருமான், இறைவனுடைய பேரருளால் அவன்தாள் வணங்கி, தாயினும் சிறந்த தத்துவனை எண்ணி எண்ணி அவனுடைய பெருமையைப் பற்றி வியந்து, சிறுமை பொருந்திய தனது உயிருக்கும் ஒளியைக் காட்டி, வழியைக் காட்டி, தன்னை ஆட்கொண்ட இறைவனுடைய பெரும் கருணையை உணர்ந்து உள்ளம் மகிழ்கின்றார்: நெகிழ்கின்றார். இறைவன் அளவற்ற பெருமையுடையவன் விண்ணுலகத்தில் வாழ்பவர்கள் கூட அறிய இயலாதவன். ''வான நாடரும் அறியொணாத நீ'' என்றார் மாணிக்கவாசகர். எல்லோருக்கும் மேலான பெருமையுடையவன் என்றார் திருமூலர். வானுலகவாசிகள் இறைவனை அறிய முயன்றாலும், அவர்களுடைய அறிவுக்கு அப்பாற்பட்டவன்.

''ஏனோர் பெருமையன் ஆகிலும் எம்மிறை
.... .... ..
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
.... .... ....''

(திருமந்திரம்......3024)

அவன் அரியவன். மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களாகிய வானவர்களும் அறியாத கோலம் படைத்தவன். அத்தகையவன் திருத்தில்லையில் யாவரும் காணக்கூத்தனாகவிளங்குகின்றான். எல்லோரும் பார்க்கும் வகையில் வந்து என்னை கண்டுகொண்டான். அது எத்தனைச் சிறப்பு என்பார் மணிவாசகப்பெருமான்.

''மேலை வானவரும் அறியாததோர்
கோலமே! எனை ஆட்கொண்ட கூத்தனே!''

இறைவன் எல்லா குணங்களையும் கொண்டவன். குணங்களுக்கு அப்பாலும் நிற்பவன். எல்லா உயர்வுகளுக்கும் மேம்பட்ட உயர்வுகளை உடையவன். அத்தகையவன் என்னுடைய உள்ளத்தின் இருளை அழித்து, ஞானத்தையும், பக்தியையும் அடியேனுக்கு அருளினான் என்பார் நம்மாழ்வார்.

''உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்''.

(திருவாய்மொழி)

இறைவனுடைய பெருமையை அவனுடைய பெரும் கருணையில் காணலாம். எல்லாவற்றையும் பொறுத்து அருளுபவன் அவன். நமது பிழைக்கு இரங்குபவன். நமது சிறுமையால் நாம் செய்யும் அற்பத்தனமான காரியங்

*[ஒரு தந்தை தாயும் இல்லாதவரான சிவபெருமான், காரைக்கால் அம்மையாரை ''அம்மையே!'' என்று அழைத்து இன்பம் கண்டார். காரைக்கால் அம்மையாரின் பக்தி உள்ளம் எத்தகைய தாய் உள்ளம் என்பதனை இக்கட்டுரையில் மிகச்சிறப்பாக வடித்துக் காட்டுகிறார் திருமந்திரச் செம்மல். படித்து மகிழ வேண்டுகிறோம். —ஆசிரியர். ]*



## அறநிலையத் துறைக்குப் புதிய ஆணையாளர்

நம் இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையாளராக திருமிகு துரை. சுந்தரேசன் ஐ.ஏ.எஸ். அவர்கள் 6—5—92 புதன்கிழமை முதல் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்கள்.

---

களையும் பொறுத்து நமக்கு பல வாய்ப்புக்ளை அளித்து, அவனை நாம் நாட வேண்டும் என்கின்ற அவாவிற்கு நம்முடைய உள்ளத்திலே வித்திடுகின்றான்.

இறைவனுடைய பொறுமைக்குப் பல உதாரணங்கள் கூறுவதுண்டு கருடனால் துன்புறுத்தப்பட்ட பாம்புகள், கருடனுக்கு அஞ்சி சிவபெருமானிடம் அடைக்கலம் புகுந்தன. சிவபெருமானும் அவற்றை அணிகளாக பூண்டு கொண்டார். பின்னர் தாருகாவன முனிவர்கள் வேள்வியிலிருந்து தன்பால் சினந்து வந்த பாம்புகளையும் கையால் பற்றி ஆடரணங்களாக அணிந்து கொண்டார். சிவபெருமானின் திருவுருவத்தில் எங்கும் பாம்பு. ‘அராப் பூண்பவனே'' என்பார் மாணிக்கவாசகர்.

காரைக்கால் அம்மையாருக்கு பாம்பென்றால் பயம் போலும். இறைவனுடைய திருமேனியில் உள்ள பாம்புகளைப் பார்க்கின்றார். ''எம்பெருமானே! இந்தப் பாம்புகளை நீ பூணக்கூடாது. அவற்றை அகற்றிவிடு: உனக்கு வேறு ஆபரணம் இல்லையா? எத்தனையோ பொன் ஆரங்கள் இருக்கின்றனவே. நீ விரும்பினால் அவையெல்லாம் கிடைக்காதா? பொன் ஆரம் ஒன்றை நீ அணிந்து கொள்ள வேண்டும். திரிபுரங்களை வென்ற உனக்கு பொன் ஆரம் கிடைக்காதா?'' என்று காரைக்கால் அம்மையார் தாய்ப்பாச உணர்வுடன் சிவபெருமானிடப் வேண்டிக்கொள்கின்றார்

அம்மையார் மீண்டும் அந்தப் பாம்புகளைப் பார்க்கின்றார். சிவபெருமானுடைய திருமேனியில் பாதியாக இறைவி வீற்றிருக்கின்றாள். அவள் இமவானுடைய அருமைச் செல்வியாவாள். ஒரு கணமும் சிவபெருமானிடமிருந்து பிரிய மாட்டாள். இடப்பக்கத்தில நிற்பவள். பெருமானின் திருமார்பில் உள்ள ஒரு பயங்கரமான பாம்பு இறைவி இருக்கும் பக்கம் நகருவதைக் காண்கின்றார். உள்ளத்திலே ஒரு பெருத்த அச்சம் தோன்றுகிறது. இவ்வாறு பாம்பு நகர்ந்து வருவதை இறைவிக்குத் தெரிவிக்க வேண்டுமே! இறைவியோ அந்தப்பாம்பைப் பார்க்காதது போல் இருக்கின்றாள். பெருத்த தாயன்புடன் காரைக்கால் அம்மையார் மக்களை நோக்கி ''தகுதியுடையவர்கள் இதைப் பற்றி ஏதாவது செய்யுங்கள். பாம்பு மேலும் நகர்ந்தால் உமையம்மைக்கு என்ன நேரிடும் என்று தெரியவில்லையே. நினைத்தாலே பயமாக இருக்கின்றது.'' என்கிற உணர்வில் பேசுகிறார்.

''தகவுடையார் தாம்ஊரேல்
தார்அகலம் சாரப்
புகவிடுதல் பொல்லாது
கண்டீர்!— மிக அடா
ஊர்ந்திடுமா நாகம்
ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமேல் ஏபாவந்தான்!''
(அற்புதத் திருவந்தாதி)

அம்மையார் பாம்பைப் பற்றி பயப்பட வேண்டிய அவசியமில்லை. அம்மையார் அன்பு மேலிட்டு இவ்வாறு பாடுவது இறைவனுடைய திருவிளையாடலை நமக்கு எடுத்துக்காட்டுவதற்குத்தான். உமையம்மை அருளுக்கு இருப்பிடம். கருணை வடிவம். சிவபெருமானின் சக்தி அம்சம். இறைவனிடம் அடைக்கலம் புகுந்த எல்லா உயிர்களும் எம்பெருமானின் அருள் பெற்று உயர்வுடன் வாழலாம் என்பதே பொருள்.

இறைவனுடைய கருணையே அவனது பெருமைக்கு அடையாளம். அவனுடைய கருணைக்கு வரம்பு கிடையாது. தன்னைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் புகலிடமாய் விளங்குகின்றான். பாம்புக்கும் திங்களுக்கும் எப்போதுமே பகை. பாம்பும் திங்களும் இயற்கையால் மாறுபட்டவை. பாம்பு நடுக்கத்தைத் தருகிறது. சந்திரன் மகிழ்ச்சியைத் தருகின்றான். சந்திரனிடம் இருப்பது அமுதம் பாம்பு விஷத்திற்கு இருப்பிடம். இயற்கையில் இவை இரண்டும்வெவ்வேறு இடங்களில் இருப்பவை. ஆனால், இவை இரண்டும் ஓரிடத்தில் இருப்பது அருமை. அந்த அருமையான காட்சிக்குக் காரணம் சிவபெருமான். பாம்பையும் திங்களையும் இறைவன் தன்னுடைய செஞ்சடையிலே வைத்திருக்கிறான். அவன் சடையில் ஏறுவதற்கு முன்பு அவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பகைத்தன. சடையில் ஏறிய பிறகு இரண்டும் பகை ஒழிந்து சிவபெருமானுடைய சடைக்குஅணியாகத்திகழ்கின்றன. ஞானசம்பந்த பெருமானுக்கு இந்தக் காட்சி பெருத்த வியப்பைத் தருகின்றது.

''சொலீர்
பின்னு செஞ்சடையிற் பிறை பாப்புடன்
வைத்ததே''

பாம்புக்கும் திங்களுக்கும் தஞ்சம் அளித்த பெருமான் கங்கையையும் தனது சடையில் தாங்கிக் கொள்கின்றான். கங்கை வானுலகத்தில் பரந்து, விரைந்து, ஆழ்ந்து, மிக்க ஆரவாரத்தோடும், மிடுக்கோடும் சுழன்றுகொண்டு இருந்தது. அலைகளோடு சீறிக்கொண்டு, விண்ணுக்கு அடங்காமல் செருக்கோடு உலவி வந்த கங்கையை சிவபெருமான் தனது சடையில் தாங்கி, அதன் வேகத்தை அடக்கி, பகீரதனுடைய தவத்திற்கு இரங்கி, பூமியின் தாங்கும் சக்திக்கேற்ட கங்கையின் நீரை பூமிக்கு அளித்தான். இறைவனுடைய பெரும் கருணைக்கு இதுவும் ஓர் உதாரணம். 'பொங்கு கங்கை சடைச் செருப்பவனே!' என்றார் மாணிக்கவாசகர். கங்கை பெட்டிப் பாம்பைப் போல அடங்கிவிட்டது. இருந்தாலும், காரைக்கால் அம்மையாருக்கு, அவருடைய தாயுள்ளத்திலே ஒரு பயம் தோன்றுகிறது. இறைவனோ கங்கையைத் தலையில் வைத்திருக்கின்றான். கங்கையானவள் இன்றைக்கு குளம் போல அமைதியாக வீற்றிருக்கின்றாள். ஆனாலும், அவளுடைய செருக்கு முழுமையாக நீங்கிற்றா என்று தெரியவில்லை. சிவபெருமானுடைய சடை கங்கைக்குச்கரையாக இருக்கின்றது. அந்தக் கரைக்குள்ளேயே பாம்பையும், பிறையையும் இழுத்துக் கொண்டு, அங்கு மிங்கும் ஓடுகின்ற கங்கை ஒருவேளை வெள்ளம் பெருகி, சடைக்கு மேலாக வளர்ந்து நீர் பெருக ஆரம்பித்தால் இறைவன் என்ன செய்வானோ என்று வியக்கின்றார் காரைக்கால் அம்மையார். சிறு குழந்தைக்குச் சொல்லுவது போல, இந்தப் பொல்லாத கங்கையை நம்பாதே என்கின்றார். ஏன் இவ்வாறு செய்கின்றாய் என்று இறைவனிடம் கேட்கின்றார்.

''கூறுஎமக்கு ஈடு, எந்தாய்!
குளிர்சடையை மீதுஅழித்திட்டு
ஏற மிகப்பெருகின்
என்செய்தி?— சீறி
விழித்துஊரும் வாள்அரவும்
வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்துஓடும் கங்கைத் திரை''.
(அற்புதத் திருவந்தாதி)

''நங்கையைப் பாகம் வைத்தார்; கங்கையைச் சடையுள் வைத்தார். கங்கை மணவாளன் உமையாளுக்கு தன்னுடைய இடப் பாகத்தை அளித்திருந்தார். அவர் கண்டால் கோபம் கொள்வாரோ என்று எண்ணி சிவபெருமான் கங்கா தேவியை தனது சடைமுடி மேல் வைத்துக் கொண்டிருக்கின்றார் போலும் என்று கருவூர் தேவர் வியக்கின்றார்.

''..... ..... கொடியிடை காணில்
கொடியள்என் (று) அவிர்சடை முடிமேல்
கங்கைகொண் டிருந்த கடவுளே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.''
(திருவிசைப்பா)

இதுவே அம்பிகையின் ஊடலுக்குக் காரணமாகிறது. அவருடைய ஊடலைத் தீர்க்க வேண்டியது இறைவனுடைய பொறுப்பல்லவா! இறைவி அருள்மயமானவள். அவள் என்றுமே கோபிக்கலாகாது. ஆகவே, இறைவன் பிராட்டியாருடைய ஊடலைப் போக்க வேண்டும். இறைவன் என்ன செய்கின்றான்? அருள்மயமான தேவியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றான். அவள் சிலம்புகளை அணிந்திருக்கின்றாள். சிலம்படியாள். தேவியின் திருவடிகளில் அழகேற்றுவதற்காக செம்பஞ்சு குழம்பு பூசப்பட்டுள்ளது. இறைவன் தேவியின் திருவடிகளை வணங்கும்பொழுது, அந்தக் குழம்பு அவனுடைய திருமுடியிலே படுகின்றது. காரைக்கால் அம்மையார் இந்தக் காட்சியைக் கற்பனை செய்து கொள்கின்றார். இறைவனுடைய சடை முடிக்கு இயல்பாகவே சிவப்பு நிறம் உண்டு. அந்தச் சிவப்பு நிறத்திற்கு காரணம் காட்டுகின்றார் காரைக்கால் அம்மையார். தேவியாருடைய திருவடிகளிலே பூசப்பட்ட குழம்பின் சிவப்பே இறைவனுடைய திருமுடியிலேபட்டது போலும் என்று எண்ணிக் கொள்கின்றார். இந்தச் சிவப்பு நிறத்தால் இறைவனுடைய திருமுடி அழகுபெற்று, நலம் பெற்று விளங்குகின்றது. ஆனால், இந்தச் சிவப்பு நிறம் தேவியாருக்கும் இறைவனுக்கும் நடுவே நிகழ்ந்த ஊடல் நிகழ்ச்சியை அம்பலப் படுத்திவிடுகின்றது!

''சிலம்படியாள் ஊடலைத் தான்தவிர்ப்பான்
வேண்டிச்
சிலம்படிமேல் செவ்வரத்தம் சேர்த்தி-நலப்
பெற்று
எதிராய செக்கரினும் இக்கோலம் செய்தான்
மூதிரா மதியான் முடி''.
(அற்புதத் திருவந்தாதி)

இறைவனுடைய கருணைக்கு எல்லையே இல்லை. அம்மையின் அருட்சக்தி பக்தர்களுக்கு நலம் அளிக்க வேண்டி இறைவன் தேவியினுடைய பாதங்களிலும் விழுந்து, வணங்கத் துணிகின்றான். அது மட்டுமா? நங்கையாளின் ஊடலைத் தீர்க்க இறைவன் சாம வேதத்தை பாடினான். பாடலோடு ஆடினான். இவ்வாறு செய்து பெருமாட்டியின் ஊடலைத் தீர்க்க விரும்பினான். பாடலும், ஆடலும் இறைவனுக்குக் கைவந்த கலை. அம்மைக்கும் அப்படியே. சாமர்த்தியமாக இறைவன் சாம வேதத்தைப் பாடியும் பாடிய பாணியாலே ஆடியும் தேவியினுடைய ஊடலை தீர்த்தான். தேவியின் ஊடல் தீரவில்லையென்றால் இறைவனுக்கு அமைதி இல்லை. இறைவனுக்கு அமைதி இல்லையென்றால் உயிர்களுக்கு இன்பம் இல்லை. உயிர்களுக்கு இன்பம் அளிக்க வேண்டி இறைவன் இவ்வாறு செய்கின்றான். நாவுக்கரசர் பெருமான் இறைவனுடைய கருணையை நினைத்து உள்ளம் நெகிழ்கின்றார்.

''சூடினார் கங்கை யாளைச்
சூடிய துழனி கேட்டுஅங்கு
ஊடினாள் நங்கை யாளும்;
ஊடலை ஒழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம்;
பாடிய பாணி யாலே
ஆடினார், கெடில வேலி
அதிகைவீ ரட்ட னாரே''.

இறைவனுடைய ஆற்றல் எல்லையற்றதாக இருக்கலாம். அவனுடைய சாதனைகள் கணக்கிலடங்காமல் இருக்கலாம். அவனுடைய அருளாலும் கருணையாலும் விண்ணோர் மகிழ்வு எய்தலாம். இவற்றால் எனக்கு ஆவது என்ன? என்னுடைய சிறுமையைப் பொறுத்துக் கொள்வானா? என்னுடைய பிழைக்கு இரங்குவானா? இறைவனுடைய கருணைக்கு நான் தகுதியுடையவன் என்று எவ்வாறு முடிவு செய்து கொள்வது. இறைவன் அருளால் எனக்கு நலம் பிறந்தால் அல்லவா அவனுடைய பெருமையை நான் உணர்ந்து கொள்ள முடியும். அவ்வாறு எனக்கு ஒரு நலமும் கிட்டவில்லையென்றால் இறைவனுடைய பெருமையைப் பற்றி சாத்திரங்களும், தோத்திரங்களும் பேசி என்ன பயன்? இவ்வாறெல்லாம் சிறியோராகிய நாம் நினைத்துக் கொள்ளலாம். நமது அகக் கண் திறந்து, இறைவனுடைய பெருமையை கண்டு கொள்ள தயங்கலாம். அருளாளராகிய மணிவாசகப் பெருமானுடைய உள்ளம் அத்தகைய சிந்தனையில் ஈடுபடவில்லை. அது போன்ற நினைப்பே அவருக்கு எழவில்லை.

சாதாரணமாக இருந்தவன் நான். சிறுமை பொருந்தியவன். வெறுப்பனவே செய்பவன். பொய்யெல்லாம மெய்யென்று மயங்கி நின்றவன். முக்தி நெறி அறியாத மூர்க்கரோடு இடைவிடாது பற்றிப் பழகி வந்தவன். சாதி, குலம், பிறப்பு எனும் சுழிப்பட்டுத் தடுமாறுகின்றேன். இந்திரியங்கள் வசப்பட்டு இறப்புக்கும், பிறப்புக்கும் காரணமாகின்ற வினைகளை அஞ்சாமல் செய்யும் தன்மை உடையவன். வைத்த நிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வி என்று மாய உலகின் கலக்கத்தால் அறிவிழந்த நிலையில் இருந்தேன். ஆனால், அவற்றையெல்லாம் நீ பொருட்படுத்தவில்லை என்கிறார் மாணிக்க வாசகர். அருளாளன் என்னுடைய பிழைக்கு இரங்கினான். மாய வலையில் கிடந்து புரளாமல் இருக்க அருளினான். ''நானேயோ தவம் செய்தேன்; சிவாயநம எனப்பெற்றேன்' என்கிறார். திருவருள் அமுதம் அவரது உள்ளத்தில் ஊறித்தித்தது. பிறவிக் கடலிலிருந்துஎன்னை விடுவித்து, மாறாத பேரின்பக் கரையிடம் சேர்த்தது. ''நின் திருவருளால் என் பிறவியை வேரறுப்பவனே!'' என்கிறார் மணிவாசகர்.

உனது மென் கழலைக் காட்டினாய். சித்த மலத்தை அறுத்தாய். சிவமாம் தன்மையைப் பெற வைத்தாய். என்னை ஆண்டு கொண்டாய். நீ ஓர் பெரும் பெருமான். என்னைத் துன்பக் கடலிலிருந்து மீட்டு, உன்னுடைய திருவடிகளிலே நிலை பெற்றிருக்கச் செய்து, எனது உள்ளத்தை உனது உடைமையாக்கிக் கொண்டு என்னைப் பித்தனாக்கி விட்டாய் என்கிறார் மாணிக்கவாசகர்

''பெரும் பெருமான், என பிறவியை வேர்
அறுத்துப் பெரும் பிச்சுத் தரும் பெருமான்''
(திருவாசகம்-அடைக்கலப்பத்து-408)

இறைவன் அருளால் பிறப்பும் இறப்பும் ஏற்படுகின்றன. அந்த அருள் உயிரை பாசத்தில் இடுகிறது. உடல், பொருள், கருவி கரணங்களுடன் கூடி அந்த அருளாலே உயிரும் வளருகிறது. அருளே பாசத்தையும் நேசத்தையும் உயிருக்குத் தந்து, உயிரின் உய்வுக்காக பல பிறவிகளையும் உயிருக்கு அளிக்கிறது. அருளே முத்தியையும் தருகிறது. பிறவிக்கு வித்திடுவது ஆணவமும், கன்மமும், மாயையாகிய உலகமும், உலகத்தின் பொருட்களும் ஆகும். பிறவியின் பயன் இதை உணர்ந்து, இதற்கு மூல காரணமாக இருக்கின்ற அருளின் தன்மையை உணருவதே ஆகும். இந்த நிலை வரும் வரை ஓர் அறியாமை உயிரினூடேபரவி நிற்கின்றது. அந்த அறியாமையைப் போக்குவது இறைவனுடைய அருளே. திருவருளின் அருமையை நினைந்து வியக்கும் மணிவாசகப் பெருமான், தனக்கு அறிவைக் கொடுத்து, உலகப் பொருட்கள் மீது உள்ள பற்றினை நீக்கி இறைவன் தன்னை ஆண்டு கொண்ட பெருமையை ஆனந்தமயமான ஒரு அனுபவமாக பெருமான் தன் மனத்துள்ளே கொள்கின்றார். இறைவன் மக்களுக்கு பல நன்மைகளைச் செய்கின்றான். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலான நன்மை இறைவன் உயிரை வினைக் கடலில் அகப்பட்டுள்ள நிலையிலிருந்து மீட்டு பிறவா நெறியைத் தருவதே ஆகும். ''பிறவா நெறித் தந்த பேரருளாளன்'' என்கிறது திருமந்திரம். வினைக் கடலைக் கடந்தவர்கள் இறைவன்தாள் சேருகின்றார்கள். அவர்களுக்கு இடரேதும் இல்லை. பிறவாத பேரின்ப பெருவாழ்வு அவர்களுக்குக் கிடைக்கின்றது. இத்தகைய அனுபவம் உயிருக்குக் கிட்டுகிறது என்றால் அது இறைவனின் பெருமையால்தான் என்கிறார் மாணிக்க வாசகர். இறைவன் வினை தீர்ப்பவன் மட்டுமல்ல. நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றான். நம்மை அறியாமலேயே நம்மில் புகுகின்றான். பாரெங்கும் சுற்றிச் சென்று அவனைத் தேடி அடைய முற்பட வேண்டியதில்லை. பிரம்மனும் திருமாலும் இவ்வாறு செய்தால் இறைவனை அடையலாம் என்று எண்ணினார்கள். அவர்கள்வெற்றிபெறவில்லை. கல்வியாலும் செல்வத்தாலும் இறைவனைப் பெற முடியாது. ஆனால், அன்பினால் பெறலாம். நமது உள்ளத்தை அவனுக்குத் தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளத்திலே அழுக்கு நிரம்பி நிற்கும்பொழுது, அவனையும் அங்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று முயன்றாலும் பயனில்லை. வேண்டாதவர்கள் மனதில் அவன் நிற்க மாட்டான். ஆனால், ''வினையேன் அழுதால் பெறலாமே!'' என்கிறார் மாணிக்க வாசகர் நம்முடைய ஆணவத்தை நீக்கி, நம்மை அவனிடம் ஒப்படைத்து அவனுக்கே நம்மை உடைமையாக்கிச் கொண்டு ''நீயலால் பிறிது மற்றொன்று இல்லை'' என்கிற நினைப்பு உள்ளம் முழுவதும் படர்ந்திருக்கும்பொழுது அவனைப் பெறலாம். இறைவன் பெரும் ஞானச் சுடர். சாதாரண உயிரும் அறியும் சக்தியைப் பெற்றுள்ளது. அந்தச் சக்தியால் இறைவனைக் கண்டு கொள்ளலாம். இதற்காக பெரிய சாதனைகள் தேவையில்லை. மந்திரமும் சடங்குகளும், தவமும் யோகமும் தேவையில்லை. அன்பொன்றே போதும் என்கிற நினைப்பில்நின்றவர் மாணிக்கவாசகர்.

—தொடரும்.

# தெய்வச் சேக்கிழார்



மு. கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு)

தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபி ரான்எங்கள்
பாக்கி யப்பயனாய்ப்பதி குன்றைவாழ்
சேக்கி ழான்அடி சென்னி இருத்துவாம்

— காஞ்சிப் புராணம்.

பெரிய புராணம் பன்னிரு திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறை என்பதும் இதன் ஆசிரியர் தெய்வச் சேக்கிழார் என்பதும் சைவப் பெருமக்கள் யாவரும் அறிந்ததே. தெய்வச் சேக்கிழார் இந்த பெரிய புராணத்தை ஆக்கித் தரவில்லை என்றால் சைவமே தமிழ்நாட்டில் திருஞான சம்பந்தர் காலத்திற்கு முன் மங்கி இருந்தது போல் சிறப்பிழந்திருக்கும் என்பது திண்ணம். பெரிய புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனி அடியார்கள் தொகை அடியார்கள் வரிசையில் இது வரை தோன்றியுள்ள பல அருளாளர்கள் அந்த அடியார்களின் அடிச்சுவட்டில் திருநெறிய வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகி சைவத்தையும் அடியார்களையும் போற்றி வந்துள்ளனர். தாம் இயற்றிய பெரிய புராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் திருத்தொண்டர் புராணம். இப்புராணத்தின் நோக்கம் என்ன என்று அவரே கூறுகிறார்.

''உலகம் உய்யவும் சைவம்நின் றோங்கவும்
அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய
நிலவு தொர்ண்டர்தம் கூட்டம் நிறைந்துறை
குலவு தண்புனல் நாட்டணி கூறுவோம்''

அவர் கூறிய வண்ணம் இன்று வரை உலகம் உய்ந்து வந்துள்ளது. சைவமும் நின்று ஓங்கி நிலவி வருகிறது. இவர் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பிகள் பாடியுள்ள திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ''வந்த வாறு வழாமல் இயம்புவாம் ''என்று இப்புராணத்தை இயற்றியுள்ளார்.

''மற்று இதற்குப் பதிகம்வன்தொண்டர்தாம்
புற்றுஇடத்து எம்புராணர் அருளினால்
சொற்ற செய்த்திருத் தொண்டத் தொகை
எனப்
பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம்''

அந்த மெய்ப்பதிகத்தடியார்களை நம்தம்
நாதனாம் நம்பியாண்டவர் நம்பி

''புந்தி ஆரப் புகன்ற வகையினால்
வந்த வாறு வழாமல் இயம்புவாம்''
என்று கூறுகிறார் சேக்கிழார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை எழுந்த வரலாற்றுக் குறிப்பினையையும் அவரே குறிப்பிட்டுள்ளார்.

''என்று மாமுனி வன்தொண்டர் செய்கையை
அன்று சொன்ன டடியால் அடியவர்
தொன்று சீர்திருத் தொண்டத் தொகைவிரி
இன்றென் ஆதரவால் இங்கு இயம்புகேன்''

திருமலையில் எழுந்தருளியிருந்த பல்லாயிர சுத்தயோகிகளுக்கு, உபமன்னிய முனிவர் சுந்தரர் கயிலாயத்திற்குத் திரும்பிய போது அவர் வரலாற்றை எடுத்துரைத்தார். இந்த அடிப்படையிலே இப்புராணத்தைச் சுந்தரர் வரலாற்றுப்புராணபாகவே ஆரம்பித்து முடித்துள்ளார். இது தனித் தமிழ் நூலேயன்றி வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு அல்ல.

**சேக்கிழார் வரலாறு**

கரிகாலன் தொண்டை நாட்டை வளப்படுத்தி நாற்பத் தெண்ணாயிரம் குடிகளை குடிபுகச் செய்தான் என்பதும் அக்குடிகளுள் சேக்கிழான் குடி ஒன்று என்பதும் இவர்கள் வேளாளர்கள் என்பதும் அக்குடியில் தோன்றியவர் சேக்கிழார் என்பதும் அக்குடிப்பெயரே அவருக்குச் சிறப்பு பெயராய் அமைந்துவிட்டது என்பதும் வரலாறு.இவர் அருண் பொழித் தேவர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார் என்று உமாபதி சிவாச்சாரியார் கூறியுள்ளார். சேங்கிழாரது தெய்வ வாக்குப்பற்றி இப்பெயர் எழுந்தது என்று சிலர் கூறுவர். அருண்மொழி என்ற பெயர் முதல் இராசராச சோழனின் பெயர் என்றும், தம் அரசரிடத்து அன்புள்ள மக்கள் தம்மக்களுக்கு அவ்வரசனின் பெயரை இட்டு வழங்கிய மரபை ஒட்டி இராச

ராசன் சிவ பக்தியில் சிறந்து விளங்கியமையால் சேக்கிழாரின் பெற்றோர் இவருக்கு அவ்வரசனின் பெயரைச் சூட்டினார்கள் என்றும் சிலர் கூறுவர். திரு வெள்ளியங்கிரி முதலியார் இவர் தந்தை என்றும் திருமதி அழகாம்பிகை இவர் தாயார் என்றும் கர்ண பரம்பரையாகச் சொல்லப்படுகிறது.

திருமழபாடி சிவாலயத்திலுள்ள ஒரு சாசனத்தில் ''ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர் சேக்கிழார் மாதேவடிகள் ராமதேவனான உத்தமப் சோழ பல்லவராயன்'' என்று குறிக்கப்பட்டுள்ளது ஆதலால் சேக்கிழாருக்கு இராம தேவர் என்ற இயற்பெயர் இருந்தது என்றும் தெரிகிறது.

தொண்டை நாடு இருபத்து நான்கு கோட்டங்கள் கொண்டது. அவைகளில் ஒன்று புலியூர் கோட்டம். அதன் உட்பிரிவுகள் பல வற்றுள் ஒன்று குன்றத்தூர் வளநாடு.

அதனுள் இருந்த பல ஊர்களிலும் சிறந்து விளங்கியது குன்றத்தூர் என்னும் பதி. இவ்வூர் கி.பி. பத்தாவது பதினோராவது நூற்றாண்டில் பேரூராக விளங்கி இருந்தது. இப்பொழுது இது சிற்றூராக உள்ளது. இவ்வூரில் தான் நமது சேக்கிழார் பெருமான் பிறந்தார் இவரது திரு நட்சத்திரம் வைகாசிப் பூசம்.

இரண்டாம் குலோத்துங்க சோழனே அனபாயன். இவன் ஆட்சிக் காலம் கி.பி. 1133—1146 ஆகும். இவருக்கு நமது சேக்கிழார் முதல் அமைச்சராய் இருந்தார். ஆகவே இவர் காலம் 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.

சேக்கிழார் இளமை முதலே நன்கு கல்வி கற்று இலக்கண இலக்கிய திருமுறைகள் சாத்திரப் புராண இதிகாசங்களில் நல்ல பயிற்சியும், கல்வெட்டு ஆய்வும் வரலாற்றுப் புலமையும் கொண்டு விளங்கினார். ஔவையார், ''தொண்டை நாடு சான்றோர் உடைத்து'' என்று கூறியதை பரிசோதிக்க விரும்பி சோழன் தொண்டைமானுக்கு மூன்று கேள்விகள் எழுதி அனுப்பி தொண்டை நாட்டுச் சான்றோர் வாயிலாக விடை காணும்படி கேட்டுக்கொண்டான். அவ்வாறே அக்கேள்வித்தாளை சேக்கிழாரிடம் கொடுக்க சேக்கிழார் அம் மூன்று கேள்விகளுக்கும் மூன்று திருக்குறள்களை விடைகளாக எழுதி அனுப்பினார். அதைக் கண்ட சோழன் பெரிதும் மகிழ்ந்து அவரை வரவழைத்து முதல் அமைச்சராக்கி உத்தமச் சோழ பல்லவர்என்ற பட்டத்தையும் வழங்கினான்.

முதல்கேள்வி: மலையில் பெரியது எது?.
பதில்: நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்

இரண்டாம் கேள்வி: கடலில் பெரிது எது?
பதில்: பயன்தூக்கார் செய்த உதவி.

மூன்றாம் கேள்வி: உலகில் பெரியது எது?.
பதில்: காலத்தினால் செய்த நன்றி.

இந்த வரலாறு சிதம்பர சபாநாதர் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பெரியபுராணத் தோற்றம்**

சோழ மன்னன், திருத்தக்க தேவர் பாடிய சீவக சிந்தாமணியினைப் பொருள் விரிக்குமாறு கேட்டு இன்புற்றுவந்தான். மன்னன் சைவனாக இருந்தும் சமண காவியத்தைக் கேட்டு இம்மை மறுமை இன்பங்களை இழக்கிறானே என்று இரங்கி சேக்கிழார் சுந்தர மூர்த்தி சுவாமிகள் இயற்றிய திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்டுள்ள நாயன்மார்களின் வரலாறுகளையும் திருத்தொண்டத் தொகை சிவனருளால் பாடப்பெற்றது என்பதையும் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் உணர்த்தி அருள நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி பாடித்துதித்ததையும் சேக்கிழார் முறையாகச் சொல்ல கேட்டுப் பரவசமடைந்து மக்களும் இவைகளை உணரவேண்டும் என்று இவ்வரலாறுகளை விரித்து ஒரு பெருங்காப்பியமாகச் செய்துதரும் படி சோழன் வேண்டினான்.

அதற்கிசைந்த சேக்கிழார் தில்லை நகர் சென்று நடராஜப் பெருமானை வணங்கி வேண்ட நடராஜப் பெருமான் அசரீரியாக ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக்கொடுத்து உணர்த்தி அருள இப்புராணத்தைப் பாடிமுடித்தார். அதை அறிந்த மன்னன் மிகவும் மகிழ்ந்து தில்லைக்கு வந்து நடராசரையும் ஆசிரியரையும்வணங்கினான். நடராசரது அருள் ஆணைப்படி சேக்கிழாரே பெரியபுராணத்தை விரித்துரைக்க ஆயிரக்கால் மண்டபத்தில் ஏற்பாடு செய்தான். அதற்கு எல்லாஇடங்களுக்கும் தகவல் அனுப்பி சிற்றரசர்கள் அமைச்சர்கள் முதலிய பலரையும் வரச்செய்தான். தில்லை வாழ் அந்தணர்களும் மடாதிபதிகளும் கலந்து கொண்டனர். சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி அடுத்த சித்திரைத் திருவாதிரையில் அரங்கேற்றுரையை நிகழ்த்தி முடித்தார். அரங்கேற்றத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் உணவும் உறைவிடமும் அரசனே முன்னின்று ஏற்பாடு செய்து கொடுத்தான்.

நிறைவு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினான்.

அரசன் ஆசிரியரையும் புராணத்தையும் யானைமேல் ஏற்றி தானும் உடன் ஏறி ஆசிரியருக்குத்தானே வெண்சாமரை வீசி ஊர்வலம் வந்தான். ஆசிரியருக்கு ஞான முடி சூட்டித் ''தொண்டர் சீர்பரவுவார்'' என்ற பட்டத்தை அளித்துப் போற்றினான். திருத் தொண்டர் புராணத்தை பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்துச் செப்பேடு செய்து நடராசர் சந்நிதியில் வைத்தான்.

அம்பலவாணர் அடியெடுத்துக் கொடுத்து உள்நிறை உணர்த்தியருள ஞானக் கண்ணாலே நிகழ்ச்சிகளைக் கண்டறிந்து சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார். நடராசப் பெருமானின் அருளாணைப்படி ஆயி

ரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றமும் நடந்தது. அதனால் திருவள்ளுவரைப் போல் இவரும் தெய்வப் புலவர் என்ற பெருமைக்கு உரியவரானார்.

**புராண அமைப்பு :** ஆசிரியர் இதை மாக்கதை என்று குறிப்பிடுகிறார். அவரே இன் தமிழ்ச் செய்யுட்கள் கொண்டவை என்கிறார். இரண்டு காண்டங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுத்துப் பாடியுள்ளார். 10 பாக்கள் கொண்ட டாயிரம் உண்டு. மொத்தம் 4286 திருவிருத்தச் செய்யுட்கள் கொண்டது. இவைகளில 33 பாக்கள் இடைச் செருகல் என்று பிற்காலத்தவர் கூறியுள்ளனர்

புராண வரலாறு திருக்கயிலையில் தொடங்கி திருக்கயிலையிலேயே நிறைகிறது. சுந்தரரின் திருத்தொண்டத் தொகை வரிசையிலேயே அடியார்களின் வரலாறுகளைப் பாடியுள்ளார். பல பாடல்கள் தேவாரப் பாக்களுக்கு விரிவுரை போல அமைந்துள்ளது. சில பதிகங்கள் பாடப்பெற்றுள்ள சந்தத்திலேயே வரலாற்றுப் பாடல்களும் அமைந்துள்ளன. சில அற்புதங்கள் நிகழ்ந்தமைக்குரிய காரணங்களும் கூறப்பட்டுள்ளன. அந்தந்த நாட்டுக்கு ஏற்பவும் அந்தந்த மரபுக்கு ஏற்பவும் வரலாற்றின் சூழ்நிலைக்கு ஏற்பவும் செய்திகளை அமைத்துள்ளார். பெண்களைப் பற்றிக் கூறும் போதெல்லாப் ''அர்'' விகுதியைப் போட்டுச் சிறப்பித்து உள்ளார். மங்கலமற்ற சொற்களை தவிர்த்துள்ளார். தெய்வ நலம் குறையாமல் நிகழ்ச்சிகளை அமைத்துள்ளார். அடியார்களின் செயல்களை எல்லாம் அருளிச் செயல்கள் என்றே குறிப்பிட்டுள்ளார். வணங்கினார் என்று என்று கூறாமல் வணங்கி அருளினார் என்று குறிப்பிடுவார். செயல் செய்ததை, செய்து அருளினார் என்பார். ஒவ்வொரு நாயன்மார் வரலாற்றையும பக்திச் சுவை நன்கு விளங்கும்படி பாடியுள்ளார். சேக்கிழார் விளக்குப் உவமைகள் எல்லாமே சிவ சிந்தனை பொதிந்தவை.

அம்பலவாணர் எடுத்துக் கொடுத்த ''உலகெலாம்'' என்ற தொடரை முதலிலும் இடையிலும் முடிவிலும் வைத்துப் பாடியிருப்பது போற்றுதற்குரியது. ''உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்'' என்று பாயிர முதல் பாட்டிலும் திருஞானசம்பந்தர் புராண 216வது பாடலில் ''ஓதி ஏறினார் உய்ய ''உலகெலாம்'' என்று இடையிலும், வெள்ளானைச் சருக்கத்தில் 53வது கடைசிபாடலில்''நின்றது எங்கும் நிலவி ''உலகெலாம்'' என்று கடைசியிலும் பாடியுள்ளார். புராணத்தை உலகெலாம் என்று முடித்திருப்பது அருமையிலும் அருமை. உலகமெலாம் போற்றத்தக்க ஒப்பிலாக் காவியம் பெரியபுராணம்.

**பெரியபுராணச் சிறப்பு:** இப்புராணத்தில் நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த தமிழக வரலாறும் உரிய இடங்களில் நன்கு கூறப்பட்டுள்ளது. அப்பர் காலத்துப் பல்லவ அரசன் சமணத்தினின்றும் நீங்கி சைவம் சார்ந்து குணதரவீச்சரம் எடுத்தமை, சோழர் குறுநில மன்னராக வாழ்ந்தமை, புகழ்ச்சோழன் ஆண்டமை, பல்லவர் வாதாபியை அழித்தமை, நெல்வேலியில் நெடுமாறன் போர் செய்து வென்றமை, கோட்புலியார் காலத்துப் பஞ்சம், அப்பர் சம்பந்தர் காலத்துப் பஞ்சம், இராச சிம்மன் கயிலாசர் நாதர் கோயில் கட்டியது முதலான பல வரலாற்றுச் செய்திகளும், பல தலங்களின் வரலாறுகளும் இடம் பெற்றுள்ளன.

கண்ணப்ப நாயனார் வரலாற்றில் கண்ணப்பரைப் பற்றி சிவகோசரியார் கனவில் சிவபெருமான் கூறியது மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. கண்ணப்பர் வடிவெலாம் ''அன்பின் வடிவம்; அவர் அறிவு இறைமயமான அறிவு, அவர் செயல் எல்லாம் நமக்கு இனியவாம்'' என்று இறைவர் சுருங்கக் கூறி விளங்க வைத்துள்ளார். ஆனாய நாயனார் புராணத்தில் குழல் அமைப்பைப் பற்றியும் குழல் இசையைப் பற்றியும் விளக்கியுள்ளார். இயற்பகை நாயனார் மனைவியை ''மெய்த்தவர் கேட்ட வாறே கொடுத்தனன்'' என்று கூறியபோது கலங்கிப்பின் மனம் தெளிந்து ''நீர் உரைக்கது ஒன்று நான் செய்யும் அத்தனையல்லால் உரிமை வேறுளதோ எனக்கு'' என்று கூறி அவர் வணங்கினார் என்பதோடு இயற்பகை நாயனார் மனைவியைத் ''திருவிலும் பெரியாள்'' என்று குறிப்பிட்டு இலக்குமியை விட பெரியவள் அவள் என்று அவர் கற்புத்திறத்தை வியந்துள்ளார். ஏனாதி நாயனார் புராணத்தில் போர்க்களத்தையே படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

திருமலைச் சிறப்பு பகுதியில் தென்திசையைப் பலவாறாகப் போற்றியுள்ளார். மாதவம் செய்த தென் திசை என்றும், பெருமை சேர் பெரும்பற்ற புலியூர் ஒருமையாளர் வைப்பாம் பதி இருக்கும் இடம் என்றும், அத்தன் ஆடும் அம்பலம் இருக்கும் இடம் என்றும், காதல் மங்கை இதய கமலமாய் பாதோர் பாகன் உறையும் ஆரூர் இருக்கும் இடம் என்றும், எம்பிராட்டி கம்பையாற்றில் வழி பட்ட உம்பர் போற்றும் காஞ்சிமா நகரம் உடையது என்றும், நங்கள் நாதனாம் நந்தி தவம் செய்து பெருமை பெற்ற ஐயாறு என்ற தலம் இருக்குமிடம் என்றும், தேசம் எல்லாம் விளங்கிய தோணிபுரம் இருக்குமிடம் என்றும் பலபட பல பாக்களில் புகழ்ந்துள்ளார்.

சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கையை நிறை தவத்துப் பேராளர் அவர் தமக்கு பெருகுதிரு மனை அறத்தின் வேர் என்றும் விளக்கு, திரு என்றும் போற்றியிருப்பது சிந்தனைக்கு ஓர் விருந்து.

இங்ஙனம் பெரியபுராணம் முழுதும் தெய்வக் கலைக் களஞ்சியம் என்பதும், தெய்வீக இலக்கிய நூல் என்பதும் இதனை ஓதுவார் உணர்வர்.

**நூற் பயன் :** மக்களின் சிந்தையிருள் போக்கி, ஞானவொளி தந்து இகத்துப் பரத்தும் இன்பமளித்துப் பேரின்ப முத்தியை அடைய உதவும். கலை ஞானங்களை அறிந்து ஒழுகும் உலகியல் நல்வாழ்வுக்கு பெரியபுராணம் பெருந்துணையாகும்.


துருவாசருக்கும் அவருடைய சீடர்களுக்கும் அமுதிடாவிடில் அவர்தம் சாபத்திற்கும், பாபத்திற்கும் ஆளாக நேரிடுமே! இப்பொழுது என்ன செய்வது?
ஆபத்பாந்தவர், அனாதை ரட்சகர் ஸ்ரீ கிருஷ்ணர் இருக்கையில் நமக்குப் பயமேன் அண்ணா!
சித்திரபாரதம்
க.வ செல்வன்
படம் . MN ராஜ
சகாதேவன் உபாயம் கூற தருமர் கண்ணபெருமானைத் தியானம் செய்கிறார். தருமனின் இதய கமலத்திலிருந்து வெளிப்பட்டுத் தோன்றுகிறார் கண்ண பரமாத்மா!
தங்கையே துரோபதை! பசிக்கிறதம்மா... பசிக்கிறது! என் பசிக்கு அமுது கொண்டு வா!
அண்ணா., உங்களுக்குமா பசி! வந்திருக்கும் முனிவர்களுக்கு அமுதிட என்ன செய்வது என்று கலங்கித்தானே உங்களை இங்கு வரவழைத்தோம்.
ஆதவன் கொடுத்த அட்சய பாத்திரமும் உச்சி வேளைக்குப் பின் உதவிடாதே அண்ணா!
தங்கையே கலக்கம் வேண்டாம். அட்சய பாத்திரத்தை நன்கு தேடிப்பார். ஒரு சோற்றுப் பருக்கை ஒட்டிக்கொண்டு இருந்தாலும் அதை இங்கு என்னிடம் கொண்டு வா!
கண்ணன் கூறியது போலவே அட்சய பாத்திரத்தில் சோற்றுப் பருக்கை ஒன்று ஒட்டிக்கொண்டிருக்க அதை கொண்டு வந்து கொடுக்கிறாள் துரோபதை.




புளியரை கணேசன்

''நடமாடுந் தில்லைவளர் நாதர் சிதம்பரனார்
இடமாயிப் புளியில் முளைத்தெழுந்த
புண்ணியனே!
மடமாலையஞ் சிறக்குமா நிலத்திலே யதிகம்
தடம்வாவி சூழ்புளிகைச் சங்கர சதாசிவமே!''

— சங்கர சதாசிவமாலை.

திருக்குற்றால மலைச்சாரலிலே திருக்குற்றாலத்திற்கு மேற்கே சுமார் 10 மைல் தொலைவில் அமைந்துள்ளதும், கிழக்கில் பச்சைப் பசேலெனப் பட்டாடை விரித்தாற் போன்ற பசுமையான கழனிகளாலும் மற்ற மூன்று பக்கங்களிலும் நெடிதுயர்ந்த பர்வதங்களாலும் சூழப்பெற்றதும், ஈஸ்வரன் புளிய மரத்தின் பொந்திலிருந்து வெளிப்போந்து பக்தர்களுக்குக் காட்சியளித்து வருவதால் 'புளியரை' என்னும் பெயர்பெற்றதுமாகிய அழகிய சிற்றூர்!.

முன்பு ஒரு சமயம் பாண்டிய நன்னாட்டிலும் சோழவள நாட்டிலும் சமணர்கள் ஆதிக்கம் வலுத்து, சைவசமயத்தினர் பீடிக்கப்பட்டிருந்த காலம்! அக்காலத்தில் தில்லையம்பதியில் வீற்றிருக்கும் கைலைநாதர் திருக்கோயில் சமணர் கைவசமாகவே, அவ்வூர்ச் சிவ பக்தர்கள் தங்கள் தெய்வமான நடராஜப் பெருமானுக்கு ஏதேனும் தீங்கு நேருமோ என்று அஞ்சி, அவரின் திருச்சிலையைக் கோவிலிலிருந்து எடுத்துக் கொண்டு சமணர் கண்ணுக்குப் புலப்படாத இடத்தில் மறைத்து வைக்கும் கருத்துடன் தென்திசை நோக்கிச் சென்றார்கள். தென்திசை சென்றசிவபக்தர்கள் பொதிகை மலைக்கும் தெற்கேயுள்ள திரிகூடாசலத்தைக் கடந்து அம்மலைக்குத் தென்மேற்கில், சேரநாட்டில் தொடர்ச்சியாய் விளங்கும் மலைச்சாரலில் உள்ள வேணு வனத்தையடைந்தனர். பெரிய மலைகளும், கொடிய வனங்களும் நிறைந்த அப்பிரதேசத்தில், அடர்ந்து நெருங்கி வானளாவி வளர்ந்த பெரிய மூங்கிற் பண்ணைகளும், புளியமரங்களும் நிறைந்து தோன்றின. தாம் கொணர்ந்த விலையிலாப் பொக்கிஷத்தை மறைத்து வைப்பதற்கு இதுவே நல்ல ஸ்தலமென்று கருதிய பக்தர்கள் அங்கு நின்ற ஒரு பெரிய புளிய மரப் பொந்தில் எம்பெருமானுடைய திருச்சிலையை வைத்து, அப்பொந்தின் வாயிலைக் கற்கள், செடி, கொடி முதலியவைகளாற் மறைத்துவிட்டு வருத்தமுடன் வடதிசையேகினர்.

இங்ஙனம் எம்பெருமானுக்கும் அடைக்கலம் அளிக்கும் பாக்கியம் பெற்ற இந்தப் புளியமரம், அடுத்துள்ள குக்கிராமத்தில் வாழ்ந்து வந்த ஒரு வேளாளச் செல்வருக்குச் சொந்தமானது. அப்பெரியார் ஒரு நாள் எதேச்சையாக இப்புளியமரப் பொந்தைஉற்று நோக்குங்கால், தில்லையிற் கூத்தாடும் ஈசனார் இங்கு ஏகாந்தவாசியாய் விளங்குவதைக் கண்டு திகைத்தார்! அக்காலவியல்பை நன்குணர்ந்த அச்சிவநேசச் செல்வர் தான் கண்ட ரகசியத்தை யாரிடமும் தெரிவிக்காமல் இருந்ததோடு அந்தப் புளியமரத்திற்கு விசேஷ நாட்களில் பூஜையும் செய்து வந்தார்!

வருடங்கள் பல உருண்டோடின. சைவ சமயாச்சாரியார்கள் பலர் தமிழ்நாட்டில் உதித்தனர். சைவம் புத்துயிர் பெற்றது. ஆனால் தில்லையம்பதியில் பிரகாசம் மங்கி நின்றது! அப்புனித ஆலயத்தில் கோடி சூரியப் பிரகாசத்துடனும், ஆனந்த தேஜசுடனும் விளங்கிய தெய்வச்சிலை வேணுவனத்தில் கற்களாலும் செடி கொடிகளாலும் மூடப் பெற்று மறைந்து கிடந்தன. பல ஆண்டுகளாக அந்த அழகைக் கண்டு தரிசிக்காத பக்தர்கள் மனம் கொதித்தது. எனவே அவர்களில் சிலர் தென்திசையில மங்கி வாடும்நடராஜரின் சிலையை மீண்டும் கைக்கொள்ளும் நோக்கத்துடன் தென்திசை நோக்கி நடந்தார்கள்.

இங்ஙனம் கிளம்பிய பக்தர்கள், பல ஊர்களையும் கால்நடையாகவே கடந்து, திரிகூடாசலம் என்னும் திருக்குற்றால மலைச்சாரலையடைந்தனர். பின்னர் கானகம்முழுவதும் தேடியும்நடராஜப் பெருமான் சிலையகப்படாமல் அவர்கள் தளர்ந்து நிற்குங்கால், அசரீரியாய், ''திரிகூடாசலத்திற்குப் பஸ்யம திசையில் உள்ள வேணுவனம் ஏகுக!'' என்னும் தெய்வ வாக்குப் பிறந்தது. இதைச் செவி குளிரக் கேட்டு மட்டிலா மகிழ்ச்சிகொண்ட பக்தர்களுக்கு அந்த அடர்ந்த காட்டிலிருந்து


"ஹா இது போதும்" என்று தாமரை இதழ் போன்ற திருவாயில கண்ண பெருமான் அச்சோற்றுப் பருக்கையை இட்டுச் சுவைக்க, நீராடும் துருவாசரும், சீடர்களும்
தேவாமிர்தம் பருகியது போன்று பசியாறப் பெறுகிறார்கள். பாண்டவர் குடிலுக்கு வந்து திருமாலை வாழ்த்திச் செல்கிறார் துர்வாசர்.
தேவாதி தேவனான திருமாலைத் தரிசிக்கவும் தேவாமிர்தம் பருகவும் உன்னால் பெரும்பேறு பெற்றோம் யாம். மன்னர் மன்னனாய் நீ நீடூழி வாழ்க!
இறையருள் மறவாதிருந்தால் இன்னலும் இன்பமாகும் என்பதைத் தருமருக்கு உணர்த்தித் துவாரகைக்குப் புறப்பட்டுச் செல்கிறார் கண்ண பெருமான்.
அமித்திர முனிவர் வனத்தில் பாண்டவர்கள் வாழ்ந்து வரும் நாளில் ஒருநாள் அதிசய நெல்லிமரம் ஒன்றை அருச்சுனனுக்குக் காட்டுகிறாள் துரோபதை
கண்ணாளா! எவ்வளவு பெரிய நெல்லிக்கனி ஒன்றே ஒன்றே மட்டும் அம்மரத்தில் கனிந்திருக்கிறது பாருங்கள்! அதைப் பறித்துத் தாருங்கள்.
அருச்சுனன் கணை தொடுத்து மதுர நெல்லிக் கனியை மரத்திலிருந்து வீழ்த்த அமித்திர முனிவரின் சீடர்கள் அங்கு ஓடிவருகிறார்கள்.
வீரனே! என்ன காரியம் செய்தாய்? முனிவர் இதை அறிந்தால் உனக்குப் பேராபத்து நேரிடுமே...!



வேணுவனம் செல்லும் பாதை தெரியவில்லை! செய்வதறியாது மனங்கலங்கி நிற்கும்போது மீண்டும் அசரீரி, ''சாரை சாரையாய்ச் செல்லும் எறும்புத் தொடரைப் பின்பற்றுக'' என்று ஆக்ஞாபிக்கவே அவர்கள் அவ்விதமே பின் தொடர்ந்து திரிகூடாசலத்திற்கு மேற்கேயுள்ள வேணுவனம் அடைந்தனர் கஷ்டப்பட்டு எம்பெருமான் அடைக்கலம் புகுந்த புனிதப் புளியமரத்தை அவர்கள் கண்டனர்! தாம் தேடிவந்த பொருள் கிடைத்திடவே அவர்கள் பயபக்தியுடன் இறைவன் சிலையை எடுத்துக் கொண்டு தில்லையம்பதிக்குத் திரும்பினார்கள்.

சில நாட்கள் கழித்து மேற்கூறிய வேளாளர் வழக்கம்போல் தமது புளியமரத்தைத் தரிசிக்கப் போனார். ஆனால் அந்த மரப்பொந்தில் நடராஜப் பெருமானின் சிலையைக் காணவில்லை! அந்த சிலை இருந்த இடத்தில் சிறியதொரு சிவலிங்கம் பூமியைப் பிளந்து கொண்டு வெளியே தோன்றி நின்றது! அக்காட்சியைக் கண்ட அவர் அளவிலா ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டு பரவசமானார். இது பற்றிய செய்தி ஊரெங்கும் பரவ மக்கள் திரள் திரளாய் வந்து இறைவனை வணங்கினர்! இச்சம்பவங்கள் நடந்த காலத்தில் இவ்வூரை ஒரு சிற்றரசன் சேரன் ஆக்ஞைக்குட்பட்டு அரசு செலுத்தி வந்தான்! புளிய மரத்தில் நடந்த இறைவன் திருவிளையாட்டைப் பற்றியசெய்தி மன்னனுக்கு எட்டவே அவனும் அங்கு விஜயம் செய்து இறைவன் தோன்றியவிடத்தில் அழகிய திருக்கோவில் ஒன்றை நிறுவினான்!

மேற்கூறியவாறு சுயம்புவாக முளைத்த எம்பெருமான் இத்திருக்கோவிலில் ''சதாசிவ மூர்த்தி'' என்னும் திருநாமந்தாங்கி சர்வ ஜெகன்மாதா ''சிவகாமி'' சமேதராய்ப் பக்த கோடிகளுக்குத் தன் அன்பையும் அருளையும் பொழியும வள்ளலாக விளங்குகின்றார்! ஆறு காலப் பூஜையுள்ள இக்கோவிலில் ருக்வேத ஆகமங்கள் பின்பற்றப்படுகின்றன! கோவிலின் முகப்பில் ''சடா மகுட தீர்த்தம்'' என்னும் அழகியபுஷ்கரணி உள்ளது.

இத்திருத்தலத்தில் தட்சிணாமூர்த்தி தனி சன்னதியில் அமர்ந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வருவது தனிச் சிறப்பாகும்! வியாழக் கிழமையன்று இவரை அர்ச்சனை செய்து வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடுகிறது. அன்று அடியவர் திருக்கூட்டம் இக்கோவிலுக்கு அலைகடலெனத் திரண்டு வந்து அவன் திருவருள் பெற்றுய்கிறது! இத்திருக்கோவிலுக்கு விஜயம் செய்த சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகள் இதனைச் 'சிறிய சிருங்கேரி'' எனப் பாராட்டியிருக்கிறார்கள்.

# திருக்குடநீராட்டு விழா கண்ட நாகர்கோவில் அருள்மிகு நாகராஜர் ஆலயம்





டாக்டர் எஸ். பத்மநாபன், நாகர்கோயில்

***8-4-92 அன்று வெகுசிறப்பாக திருக்குட நீராட்டு விழா கண்ட நாகராஜர் ஆலய தலவரலாறு மிக சுவையாக விவரிக்கிறார் ஆசிரியர். படித்து மகிழவும்.***

நாக வழிபாட்டிற்காகக் கோவில்கள் பலவிருந்தாலும் நாகத்தின் பெயரையே தனதாகக் கொண்ட நாகர்கோவிலைப் போன்று சிறப்பு மிக்கது வேறிலையெனலாம். இந்தியத் தாயின் பாத கமலமான குமரி முனையிலிருந்து 18 கி.மீ. வடக்கேயுள்ள இந்நகரின் பெயர்க் காரணம் அதன் நடுவண் அமைந்துள்ள ஐந்து தலை நாகராஜரின் கோவில் தான் என்பது இதனை வலியுறுத்தும். இக்கோவிலைச் சூழ்ந்துள்ள பச்சைப் பசேலென்ற வயல்களும், ஓங்கி வளர்ந்த தென்னை மரங்களும், பூத்துக் குலுங்கி நிற்கும் பூஞ்சோலைகளும் காண்போர் மனதைக் கவர்ந்திழுக்கின்றன. இவ்வாறு இயற்கையன்னை களிநடம் புரிந்து இங்கு வருகை தருகின்றவர்களுக்கு அமைதியூட்டுகிறாள்.

இவ்வாலயத்தின் தோற்றத்தை விளக்குகின்ற முறையில் அமைந்துள்ள தலபுராணங்களோ, கல்வெட்டுகளோ கிடையாது. வால்மீகி இராமாயணம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மகேந்திரகிரி மலையில் நாகர்கள் வாழ்ந்து வந்ததாக குறிப்பிடுகிறது. (கிஷ்கிந்த காண்டம், அத்தியாயம் 67 சுலோகம் 46-49). இதிலிருந்து புராண காலத்திலேயே இப்பகுதியில் நாகர்களின் ஆதிக்கம் நிலைத்திருந்தது எனத் தெரியவருகிறது. அக்காலத்திலேயே நாகவழிபாடு இப்பகுதியில் தோன்றியிருக்கலாம்.

நாகராஜர் ஆலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதையொன்றும் வழக்கிலிருந்து வருகிறது. புல்லும், புதரும் நிறைந்த இந்த இடத்தில் இளம் பெண்ணொருத்தி புல் அறுக்க அவளது அரிவாள் ஐந்து தலை நாகத்தின் தலையில் பட்டு ரத்தம் பெருக்கெடுத்தோடியது. இது கண்டு அஞ்சிய பெண் பக்கத்துக் கிராமத்திலிருந்து சிலரை அழைத்துவர அவர்களும் இந்த அதிசயத்தைப் பார்த்து அந்த இடத்தில் ஒரு சிறு கோவிலை அமைத்து வணங்கி வந்தனர். இதைக் கேள்வியுற்று பல இடங்களிலிருந்தும் மக்கள் திரள் திரளாக் அங்கு வந்து வணங்கினர்.

பல ஆண்டுகளுக்குப் பின் தொழு நோயால் வருந்திய களக்காட்டு மன்னர் இந்தக் கோவிலைப் பற்றிக் கேள்வியுற்று ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் இங்கு வந்து வழிபட, வியத்தகு முறையில் அவரது நோய் பூரணமாகக் குணம் அடைந்தது. இதனால் இவ்வாலயத்தின் புகழ் எல்லாவிடங்களிலும் பரவியது. மகிழ்ச்சியடைந்த மன்னர் இன்றிருக்கும் ஆலயத்தைக் கட்டுவித்தார் என்பர். அத்துடன் இம்மன்னன் ஞாயிற்றுக்கிழமைதோறும் இவ்வாலயத்திற்கு வருகை தந்து தமது காணிக்கைகளைச் செலுத்தி பூஜைகளும் நடத்திச் சென்றார் என்றும் கூறுவர். அதன் பின்னர் இன்று வரை எல்லா ஞாயிற்றுக் கிழமைகளையும் புனித நாட்களாகக் கருதி பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து நாகராஜாவைத் தொழுது பயனெய்திச் செல்கின்றனர்.


இக்கதையில் குறிப்பிட்ட களக்காட்டு மன்னர் கி.பி. 1516 முதல் 1535 வரையிலும் களக்காட்டைத் தலைநகராகக் கொண்டு வேணாட்டை ஆண்ட பூதள்வீர ஸ்ரீ வீரஉதய மார்த்தாண்டவர்மா மன்னராகும். திரு. டி. க. வேலுப்பிள்ளையின் திருவிதாங்கூர் சரித்திரத்திலிருந்து இம்மன்னர் சோழர்குலத்து இளவரசியை மணமுடித்ததால் புலி மார்த்தாண்ட வர்மா என்று அழைக்கப்பட்டார் என்று அறியலாம். சோழர்களின் அரசுச் சின்னம் புலியாகும். இவர் பாண்டிய மன்னருடன் போராடி நெல்லை மாவட்டத்திலுள்ள சில பகுதிகளைப் பிடித்தடக்கினார் என்றும், கொல்லம் 710-ஆம் ஆண்டு (1535 A.D.) கர்க்கடக (ஆடி) மாதம் 26-ஆம் தேதி களக்காட்டில் இறந்தார் என்றும் அந்த சரிதம் குறிப்பிடு

கிறது. நாகராஜர் ஆலயத்தில் கிடைத்த ஒரு கல்வெட்டிலிருந்து இந்த மன்னர் தான் பழைய கோவிலைக் கேரளக் கட்டிடக் கலையமைப்பிலே புதுப்பித்தார் என்று அறிய முடிகிறது. இம்மன்னர் களக்காட்டிலிருந்து ஞாயிற்றுக் கிழமை தோறும் இந்த ஆலயம் வந்து வழிபட்டார் என்று அக்கல்வெட்டு கூறுகின்றது. இவரே கேரளநாட்டு நம்பூதிரிகளைப் பூஜை செய்ய ஏற்பாடு செய்திருக்க வேண்டும். இக்கோவிலின் தந்திரிகூட கேரளத்திலுள்ள ''பாம்பமேக்காட்டு இல்லம்'' என்ற குடும்பத்தினரே. இவர்கள் பரம்பரையாகவே நாகத்தை வழிபடுபவர்கள். பாம்புகளைக் குழந்தைகள் போல் வளர்ப்பவர்கள்.

பூதளவீர மார்த்தாண்டவர்மா தொழுநோயால் வருந்தினார் என்றும் இக்கோவிலில் வந்து குணமடைந்தார் என்றும் ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் சில ஆண்டுகளுக்கு முன்னால் கருவறையின் பின்புறம் தொழுநோய் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் ''ஓடவள்ளி'' என்ற கொடி படர்ந்திருந்து என்பதும், அது பாம்புகளின் இருப்பிடமாக இருந்ததால் ஒரு திருக்கோயில் பணியாளர் அதை வெட்டி அகற்றி விட்டார் என்பதும் பலர் அறிந்த உண்மையாகும். பின்னர் அச்செடியைத் திரும்ப நட்டு வளர்க்க முயற்சித்து பலனில்லாமற் போயிற்று. முன்பு இதன் இலையினைப் பிரசாதமாக வழங்கும் பழக்கம் இருந்து வந்தது என்றும்,ஒவ்வொரு இலையும் ஒவ்வொரு சுவையுடனிருக்கும் என்றும், முதியோர் கூறக் கேட்கலாம். நவீன மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நல்ல பாம்பின் நஞ்சு தொழுநோயைத் தீர்க்க வல்லது என்பதை கண்டு பிடித்துள்ளனர். இந்த உண்மையும் இங்கே சிந்திக்கத்தக்கது.

நாகராஜர் ஆலயத்தைச் சுற்றியுள்ள பூந்தோட்டங்கள் அழகுமிக்கவை. இத்தோட்டத்திலுள்ள நாகப்பூவை நாகராஜரின் உருவக் குறியீடாகக் கருதுகின்றனர். கோவிலையும் அதனைச்சார்ந்த தோட்டங்களையும்நாகங்கள் காவல் புரிகின்றன என்பது ஐதீகம். கோவிலைச் சுற்றிலும் நாகப்பாம்புகள் நிறைந்திருந்தாலும் இவ்வட்டாரத்திலே யாரும் பாம்பு கடித்து இறந்ததாகச் சான்றுகள் எதுவும் இதுவரை கிடையாது. இச்சிறப்பினை அமெரிக்க நாடு பதிப்பித்த உலக மதங்களின் கலைக்களஞ்சியம் உறுதிப்படுத்துகின்றது. 'கோவிலைச் சுற்றி ஒரு மைல் தூரத்துக்குப் பாம்பு கடித்து இறந்ததாக தகவல் இல்லை'' (பாகம் 11, பக்கம் 418) சில ஆண்டுகளுக்கு முன் இக்கோவில் குளத்தின் அருகே இரண்டு தலைப் பாம்பொன்று கிடைத்தது. இன்றும் அதன் உடல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இக்கோவிலில் நாகராஜருக்கும், அனந்த கிருஷ்ணனுக்கும் தனித்தனி சன்னதிகள் உள்ளன. கொடிமரம் அனந்தகிருஷ்ணன் சன்னதியில் உள்ளது. இவர்க்ள் இருவருக்குமிடையே அங்கியுடன் கூடிய சிவலிங்கம் உள்ளது. அந்த மண்டபத்திலுள்ள தூண்களிலும், சுவரிலும் சமணர்கள் வணங்கும் பார்சுவ



நாதர், மகாவீரர், பத்மாவதி இவர்களது திருவுருவங்களும் இந்து சமயத்தவரின்முருகன், கிருஷ்ணன், பத்மநாப சுவாமி ராமபிரான் போன்ற தெய்வத்திரு உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. உட்பிராகாரத்தின்தென்மேற்கு மூலையில் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அதை அடுத்து உற்சவமூர்த்தி தமது தேவியர்களுடன் நின்ற கோலத்திலே காட்சி தருகிறார். வெளிப்பிரகாரத்தில் நாகமணி பூதத்தானும், சாஸ்தாவும் உள்ளனர். கோவில் வளைவினுள் துர்க்காதேவிக்குத் தனிக்கோவில் கட்டியுள்ளனர். அண்மையில் ஏற்பட்ட இந்த ஆலயமும், கோவில் முகப்பிலே காணப்படும் இரண்டு அரசமரங்களும் பெண்களால் மிகவும் புனிதமாகக் கருதப்படுகின்றன. பிள்ளைப் பேறு வேண்டுவோர் நாகச்சிலைகளால் சூழப்பட்ட இந்த மரங்களைச் சுற்றி வலம் வந்தால் பலனடைவர் என்பது நம்பிக்கை. துர்க்காதேவி சங்குசக்கரதாரியாய் நாற்கரங்களுடன் திருமாலின் அம்சமாகக் காட்சி தந்து அருளுகிறார். துர்க்காதேவியை அடுத்து பாலமுருகன் கணபதியுடன் கோயில் கொண்டுள்ளார்.

இந்த ஆலயத்திற்கு வருகை தருகின்றவர்களை உள் வாசலின் இரு புறமும் அமைந்திருக்கும் ஐந்து தலை நாகங்களின் படமெடுத்த கோலத்திலமைந்த சிலைகள் கவராமல் இருக்க முடியாது. அவற்றுள் ஒன்றின் படத்தினடியில் சுற்றி வளையம் போலமைந்த அதன் உடற்பகுதியின் மேல் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருக்கின்ற உருவம் சமணத்தீர்த்தங்கரரான பார்சுவநாதர்தான் என்று கருதப்படுகிறது.

ஒரு காலத்தில் இணையாக வாழ்ந்த இரு பாம்புகள் மகிபாலன் என்ற கொடியவன் ஒருவனால் கொல்லப்பட்டன. இறக்கும் தருவாயில் பார்சுவநாதரின் மந்திர ஒலிகளைக் கேட்டுக் கொண்டே கிடந்ததால் மீண்டும் அவை கீழுலகில் பாம்புகளின் அரசனாகவும், அரசியாகவும் பிறந்தன. ஒரு நாள் பார்சுவநாதர் ஆழ்ந்த தியானத்திலிருந்து கொண்டிருந்த போது அவரது தியானத்தின் மூலம் வெளியான அலைகளின் சக்தி வானத்தில் சென்று கொண்டிருந்த சம்வரன் என்ற தெய்வத்தின் போக்கினைத் தடுத்து நிறுத்தியது. இதனால் கோபமடைந்த சம்வரன் ஏராளமான மழையைப் பெய்வித்து

அவரது தவத்தை அழிக்க முற்பட்டான். தியானத்தில் அமர்ந்திருந்த பார்சுவநாதரைச் சுற்றிலும் வெள்ளம்பெருகத்தொடங்கியது. இவரைப் பாதுகாக்க வேண்டி பாம்பின் அரசன் தரனேந்திரன் படமெடுத்து பார்சுவநாதரின் மேல் மழைநீர் படாமல் குடையாக நின்றான். தண்ணீர் மேலும் மேலும் உயரவே பாம்புகளின் அரசியான பத்மாவதி தாமரை மலரொன்றை அவரது திருவடியில் தோன்றச் செய்து காப்பாற்றினாள். இவ்வாறு பார்சுவநாதரின் தவத்தை அழிக்கின்ற முயற்சியில் சம்வரன் தோல்வியுற நேர்ந்தது. இது சமண சமய நூற்கள் கூறுகின்ற கதை. இதைத்தான் பாம்பின் இரு உருவங்களும் சித்தரிக்கின்றன.

இங்குள்ள கருவறையின் மேற்கூரை ஓலை வேயப்பட்டதாக இருப்பது ஒரு தனிச் சிறப்பாகும். தான் விரும்புவது ஓலைக்கூரை தான் என்றும், அதை அங்கிருந்து மாற்றக் கூடாது என்றும் களக்காடு மன்னரிடம் நாகராஜர் கனவிலே தோன்றி கூறினார் என்பர். அக்கூரையில் எப்போதுமே ஒரு பாம்பு காவல் புரிகின்றது என்றும், வருடந்தோறும் கூரை வேயப்படும்போது ஒரு பாம்பு வருவது வழக்கம் என்றும் கூறப்படுகிறது.

நாகராஜர் அமர்ந்துள்ள இடம் எப்போதும் ஈரமாகவேயிருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கிருந்து எடுக்கப்படும் மண்ணே முக்கிய பிரசாதமாகும். இது ஆறுமாத காலம் கறுப்பு நிறமாகவும் எஞ்சிய நாட்களில் வெள்ளை நிறமாகவும் இருந்து வருகிறது. எவ்வளவோ காலமாக எடுத்தும் அந்தமண் குறையாமலிருப்பது அதிசயிக்கத்தக்க பேருண்மையாகும்.

சமணப் பள்ளியாக ஒரு காலத்தில் சிறப்புற்று விளங்கிய நாகர்கோவில் நாகராஜர் ஆலயம் பின்னர் இந்து ஆலயமாக மாறியது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய திருஞானசம்பந்தரின் தேவாரத்திலிருந்தும் கல்வெட்டுகள் பலவற்றிலிருந்தும் கோட்டாறு என்னும் பெருநகரில் சமண சமயம் ஓங்கி வளர்ந்திருந்தது என்று அறியலாம். இன்று நாகர்கோவில் என்று அழைக்கப்படும் நகர் முன்பு கோட்டாறு என்றுதான் அழைக்கப்பட்டு வந்தது என்பதற்கு இலக்கியகல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. நாகராஜர் ஆலயத்துக் கல்வெட்டும் ''கோட்டாறான மும்முடி சோழபுரம்'' என்றுதான் கூறுகின்றது. இத்திருக் கோட்டாற்றில் பாதமூலத்தான், அரங்கனமாறன், உத்தணந்தி அடிகள், விமலச்சந்திரர் ஆகிய பல சமண சமயச் சான்றோர்கள் வாழ்ந்து வந்தனர்என்று கழுகுமலைக் கல்வெட்டுகள் கூறுகின்றன; கோட்டாற்றில் வாழ்ந்து வந்த சமணர்களைச் சம்பந்தர்''உடையிலாதுழல்கின்றகுண்டர்கள்'' எனப்பழித்துரைக்கிறார்.

நாகராஜர் ஆலயத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுகள் இது ஒரு சமண சமயப்பள்ளியே என்பதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. கொல்லம் ஆண்டு 696-ஆம் ஆண்டில் (1520 A. D.) தோன்றிய கல்வெட்டு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

## வெற்றி உன் சாதனையா?

ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்து விட்டால், அதை நீ செய்ததாக மார்தட்டிக் கொள்கிறாய். கெட்டது ஒன்று நிகழ்ந்துவிட்டால் அது எல்லாம் வல்ல இறைவன் செயல் என்று உருகுகிறாய்! புகழையும் மதிப்பையும், தகுதியையும் அந்தஸ்தையும், அதிகாரத்தையும், பதவியையும் சொத்தையும் சுதந்திரத்தையும் வெற்றிகளையும், சாதனைகளையும் உன்னுடைய சொந்த உழைப்பினால் பெற்றதாகக் தொண்டை கிழிய மேடைகளிலிருந்து அலறுகிறாய், இகழ்ச்சியும் தோல்வியும், தீங்கும், தவறும், உன் பங்காக வந்து சேரும்பொழுது, வெகு வசதியாக பொறுப்பை இறைவனிடத்திலே தள்ளி விடுகிறாய், ''அவன் கைப்பாவை நான்! அவன் தலைவன்; நான் ஒரு கருவி தானே?'' என்று கூறித் தப்பிக்கிறாய். இது இந்த நாள் மனிதனின் பழக்கமாகிவிட்டது. இல்லை, நாகரிகமாகவே பரவிவிட்டது. 'நான்' 'அவன்' இவற்றை வசதிக்கேற்பச் சுளுவாக மாற்றிக் கொள்கிறார்கள். குடிகாரத்தின் ஆடியைப் போல, இது வெறும் மோசடி; உட்புறம் காலியான ஆன்மீகப் போலி.

— ஸ்ரீசத்திய சாயிபாபா.

''ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிச் செயல் கொட்டாறான மும்முடி சோழபுரத்து நாகர்கோவிலிற் பள்ளி உடைய குணவீரர் பண்டிதனும், கமலாவாகன பண்டிதனும், கோட்டாற்று நாகர்க்கும் நாகராசாவுக்கும் உச்சிச் சந்திப் பூசைக்கு நாள் ஒன்றுக்கு அமுதுபடி நானாழி ஆகவும் திருநந்தா விளக்கு இரண்டாகவும் நடத்திக் கொண்டு பொதும்படி கற்பித்து தொண்ணூற்று ஆறாமாண்டு கார்முதலுக்குப் பள்ளிச் சந்தமாக விட்டுக் கொடுத்த நிலமாவது....'' (திருவிதாங்கூர் தொல் பொருளாராய்ச்சித் தொடர் வெளியீடு, பகுதி 6 பக்கம் 163).

இதில் காணப்படும் குணவீர பண்டிதன், கமலவாகன பண்டிதன் ஆகிய பெயர்களே இவர்கள் சமணர்கள்தான் என்பதைத் தெரிவிக்கப் போதுமான ஆதாரமாகும். 'நேமிநாதம்' என்ற இலக்கண நூலை எழுதிய குணவீரர் இவர்தானா என்பது ஆராயத்தக்கது. இன்றும் பள்ளி என்ற சொல் இந்து சமய ஆலயங்களைக் குறிக்காமல் பிற சமய நிறுவனங்களையே குறிப்பதைக் காண்கிறோம். இந்து சமய ஆலயங்களுக்களிக்கப்படும் நில புலன்களை மான்யம் எனவும், பிறசமய ஆலயங்களுக்கு அளிக்கப்படும் நன்கொடைகளைப் பள்ளிச்சந்தம் எனவும் குறிப்பிடுகிறோம். இந்தக் கல்வெட்டு ஒன்றே இது ஒரு சமணப் பள்ளியாக இருந்து பின்னர் இந்து ஆலயமாக மாறியதுஎன்பதற்குத் தக்க சான்றாகும்.

இக்கோயிலில் அண்மையில் கிடைத்த கல்வெட்டுகளிலிருந்து வேணாட்டு மன்னர் வீர

ரவிவர்ம குலசேகரப்பெருமாள் காலத்தில் (கி.பி. 1622-45) கொல்லம் ஆண்டு 817-ல் (கி.பி. 1641) திருப்பணி தொடங்கி 819-ல் (கி.பி. 1643) நிறைவுற்றது என்றும் அப்போது திருக்குடமுழுக்கு விழாவும் நடைபெற்றது என்றும் அறிய முடிகிறது. 350 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த ஆலயத்தில் இப்போதுதான் (8-4-1992) திருக்குடமுழுக்கு விழா நடைபெற்றது.

இவ்வாலயத்தின் தூண்களில் காணப்படும் உருவங்களில் பார்சுவநாதர், மகாவீரர், பத்மாவதி இவர்களது உருவங்கள் குறிப்பிடத் தக்கவை. அவற்றுள் படமெடுத்த ஐந்துதலை நாகத்தின் கீழ்நிற்கும் உருவம் பார்சுவநாதர் என்றும், மூன்றுதலைப் பாம்பின் கீழ் இருக்கும் உருவம் பத்மாவதி என்றும் அறியலாம். தியான நிலையில் இருக்கும் உருவம் சமணர்களின் கடைசி தீர்த்தங்கரரான மகாவீரர்தான் என்பதற்கு அதன் அடியில் பொறித்திருக்கும் சிங்கத்தின் உருவங்களும், தலையின் மேலிருக்கும் முக்குடையும் சான்றுகளாகும். சிங்கமும், முக்குடையும் மகா வீரரின் சிறப்புஅடையாளங்களென்று சமண சமயத்தின் சிற்ப சாஸ்திரம் கூறுகின்றது.

கருவறையின் வலது பக்கம் உள்ள சிவலிங்கம், அதனை அடுத்துள்ள அனந்தகிருஷ்ணன், விநாயகர் இவர்களது திருவுருவங்கள் பின்னர் நிறுவப்பட்டவைதான். சிவலிங்க சந்நிதி அமைந்திருக்கும் பாங்கே இதனை உறுதிப்படுத்துகின்றது. அனந்த கிருஷ்ணன் சந்நிதியில் உள்ள கொடிமரத்தின் உச்சியில் கூர்மம் வீற்றிருப்பதால் நாகராஜருக்குப் பின்னரே அனந்தகிருஷ்ணன் வந்திருக்கவேண்டும் எனக் கருதலாம். கருடனும், பாம்பும் பகை அல்லவா? அதனால்தான் கொடிமரத்தில் கருடனுக்குப் பதில் கூர்மம் வீற்றிருக்கிறது. சாஸ்தாவும், துர்க்கையும், பாலமுருகனும் மிகவும் அண்மையில்தோன்றியவைதான். நாகராஜர் தான் பின்னர் படிப்படியாக அனந்த கிருஷ்ணனாக மாறியிருக்க வேண்டும் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கொல்லம் ஆண்டு 764-ல் தோன்றிய கல்வெட்டு நாகராஜரை ''திருஅனந்த ஆழ்வார்'' என்றும், கொல்லம் ஆண்டு 819-ல் தோன்றிய கல்வெட்டு அவரை ''ஸ்ரீகிருட்டிணன்'' என்றும் குறிப்பிடுகின்றன.



**''இல்லறமா அது மூட்டைப் பூச்சிகளின் கட்டில், இதில் சுகமாகத் தூங்கக் கூடியவர்கள் எவரேனும் இருக்கிறார்களா?''**

—பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா

சமணர்களின் பள்ளியாக இருந்த நாகர் கோவில் நாகராஜர் ஆலயம் இன்று நான்கு மதக்கோட்பாடுகளையும் இணைக்கும் ஒரு சின்னமாகத் திகழ்கிறது. மூலவரான நாகராஜாவைத் தவிர்த்து சிவன் அங்கியுடனும், திருமால் அனந்தனடியிலும் உள்ளனர். கோவில் தூண்களில் சமணசமயத் தீர்த்தங்கரர்களான பார்சுவநாதரும் மகாவீரரும் தவக்கோலத்தில் நின்றும், அமர்ந்தும் உள்ளனர். கோவிலின் தென்வாயில் புத்த விகாரத்தை நமக்கு நினைவூட்டுகின்றது. இவ்வாறு இக்கோவில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் இந்நான்கு மதக்கோட்பாடுகளின் கூட்டுருவமாக நமக்குக் காட்சியளிக்கின்றது.

இங்கு ஆண்டுதோறும் தை மாதம் பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதமும் ஆயில்ய நாளன்று விசேஷ பூஜைகள் நடைபெறும். இக்கோவிலில் தினமும் கூட்டம்தான். குறிப்பாக ஞாயிற்றுக் கிழமைகளில் மக்கள் திரள்திரளாக வந்து வணங்கிச் செல்கின்றனர். ஞாயிற்றுக்கிழமை நாகராஜனுக்குப் பால் வார்ப்பது புனிதமாக கருதப்படுகிறது. ஆவணி மாத ஞாயிற்றுக்கிழமைகளில் இவ்வாலயம் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும். அந்நாட்களில் சுற்றுவட்டாரத்திலுள்ள மக்கள் இங்கு வந்து பால், உப்பு, நல்லமிளகு, மரப்பொம்மைகள் இவைகளைக் காணிக்கைகளாகக் கொடுத்து நாகராஜனைப் பயபக்தியுடன் வணங்கிச் செல்வர். பிற சமயத்தவர்களும் இங்குக் காணிக்கை செலுத்துவதுண்டு. கேரளத்திலுள்ள ஒரு கிறித்துவ பக்தர் இக்கோவிலுக்களித்த நாகரின் மர உருவம் சிற்ப வேலைப்பாடு மிக்கது.

நாகராஜனை வணங்குவோர் நோய் நொடியின்றி நலமெல்லாம் பெற்று வாழ்வர் என்பதும், மருந்துகளால் குணப்படுத்த முடியாத சில சர்மரோகங்கள் நாகராஜனைத் தினமும் தொழுவதால் மறைந்து போகிறது என்பதும் இங்குள்ளோர் நம்பிக்கை. நாக தோஷங்களை ஒழிக்க இது ஒரு சிறந்த இடமாகத் திகழ்கிறது. தற்போது நாகராஜர் ஆலயம் இம்மாநிலத்திலிருந்து மட்டுமின்றி பாரத நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்து தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் புண்ணியத் தலமாக விளங்குகின்றது. இவ்வாறு வந்து வணங்கிச் செல்வோர் எல்லா நலன்களும் பெற்று மன அமைதியுடன் வாழ்கின்ற காரணத்தால் இவ்வாலயத்தின் புகழ் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பக்தர்களும், பயணிகளும் மேலும் மேலும் வந்து குவிகின்றனர்.

# ஆடல்



# காணீரோ...

கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன்

## (17)

மதுரையைக் குலோத்துங்க பாண்டியன் அரசாட்சி செய்து வரும்போது அயல் தேசத்திலிருந்து வாள்வித்தையில் வல்ல ஒருவன் மதுரைக்கு வந்து இளைஞர்களுக்கு வாள் வித்தை பயிற்றுவித்தான். சோமசுந்தரப் பெருமானின் மீது அளவிலாத பக்தியுடைய அவனிடம் அனேக இளைஞர்கள் வாட்பயிற்சி பெற்றனர். அவர்களுள் சித்தன் என்பவன் தேர்ச்சி மிகப் பெற்று விளங்கினான். தன்னைப் பிறர் பெருமையாக எண்ணுவது அறிந்து அகந்தை கொண்டான். சிறிது நாட்களுக்குப் பின் தன் ஆசிரியனுக்குப் போட்டியாக ஒரு வாட்போர் பள்ளிக்கூடமே துவங்கி விட்டான். தனது ஆசிரியனிடம் பயிலும் மாணவர்களைத் தன்னிடமே பயிலுமாறு செய்து ஆசிரியனது தொழிலைக் கெடுத்தான். அது மட்டுமன்று, தனது ஆசிரியனை ஊரை விட்டே விரட்டுவதற்கு விரும்பினான். பெற்ற தாயை விரும்பிய பாவியின் தம்பியோ எனப் பிறர் எண்ணுமாறு தனது ஆசிரியனின் மனைவி மீது தகாத எண்ணங் கொண்டான். ஒரு சமயம் ஆசிரியனது இல்லம் சென்று, அவன் இல்லாத நேரத்தில் ஆசிரியனின் மனைவியைத் தீண்ட முயற்சித்தான். அவள் சித்தனை உதறித் தள்ளிவிட்டு, வீட்டினுள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு, நடந்ததைத் தனது கணவனிடம் கூறாது மனத்தினால் இறைவனை வணங்கித் தியானித்தாள். அவனது வேதனையை அறிந்த இறைவன் அவனது துயரத்தை அகற்றவும், சித்தனைத் தண்டிக்கவும் திருவுள்ளம் கொண்டார்.

''தாதகை நிறைந்த கொன்றைச் சடையவன் புறம்பு செய்த
பாதகம் அறுக்கும்கூடல் பகவன்; எவ்வுயிர்க்கும் தானே
போதகனாகித் தேற்றும் புண்ணியன் புலைஞன் செய்த
தீதகம் உணர்ந்துதண்டம் செய்வதற்கு உறுதி பூண்டாள்''

இறைவன் வாளாசிரியன் மாதிரி உருவம் கொண்டு சித்தனையணுகி ''சித்தா! காளைப் பருவத்தினனாகிய நீயும் வயோதிகனான நானும் வாட்போர் செய்து நமது வலிமைகளைக் காணலாமா?'' எனக் கேட்கச் சித்தன் இணங்கினான்.

மறுநாள் பொழுது விடிந்தது. செய்ந்நன்றி கொன்ற சித்தன் துர்க்காதேவியை வழிபட்டுப் போர்க்கோலம் பூண்டு வந்தான். இறைவனும் வாளாசிரியன் உருவத்தில் வர, வாட்போர் நடந்தது. அதைக் காணப் பெரும் கூட்டம் கூடியது.

இறைவன் கொடுத்த உடல் புனிதமானது. அவனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டியது இறைவனை நினைக்க வேண்டியது நெஞ்சு.

''நெஞ்சே நீ நினையாய்-நிமிர் புன்சடை நிமலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை(நெஞ்சே)

என்பது தேவாரம். இறைவனை நினைக்க வேண்டிய நெஞ்சினால், குருபத்தினியை நினைத்துப் பாவம் செய்து விட்டான் சித்தன். நெஞ்சு நல்ல நினைப்பு நினைக்க, வாயும் நாவும் இறைவனைப் பாட வேண்டும்.

''நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
காக்கைக்கே இரையாகிக் கழிவரே'' (தேவாரம்)

என்றனர் முன்னோர். இறைவனைப் பாட வேண்டிய நாக்கினால் சித்தன் குருபத்தினியிடம் தகாத வார்த்தை பேசி விட்டான்.

''கைகாள் கூப்பிக் தொழீர்-கடிமாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரையார்த்த பரமனை''—
(தேவாரம்)

இறைவனை மலர் தூவித் தொழ வேண்டிய கரத்தினால் குருபத்தினியைப் பிடித்து இழுத்து விட்டான் சித்தன்.

''கண்காள் காண்மின்களோ-கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள்வீசி நின்று ஆடும் பிரான்றன்னை''
(தேவாரம்)

கடவுளை அன்புடன் காணவேண்டிய கண்களால் சித்தன் குருபத்தினியைக் காமத்துடன் நோக்கிவிட்டான்.



எனவே வாள் வீரத்தனான ஆசிரியனின் வேடத்தில் வந்து இறைவன் ''குருவின் மனைவியை நினைத்த நெஞ்சை, அவளிடம் கெட்ட வார்த்தை பேசிய நாவை, தொட்ட கையைக் காப்பாற்றிக் கொள்'' எனக் கூறி, ஒவ்வொரு உறுப்பாக வெட்டி எறிந்து, கடைசியில் தலையை வெட்டிக் கொன்று மறைந்தார்.

''குரத்தியை நினைத்தநெஞ்சை, குறித்துரை
நாவைத், தொட்ட
கரத்தினைப், பார்த்த கண்ணைக் காத்தனை
கோடி என்றுஎன்று
உரைத்துரைத்து அவற்றுக்கெல்லாம் உறுமுறை
தண்டம் செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித்திருவுருமறைத்து
நின்றான்''

திடீரென வாட்பேராசிரியனைக் காணாத மக்கள் ஆச்சரியமடைந்து அவனது வீட்டில் சென்று கேட்க, அவன் மனைவி தன் கணவன் கோயிலுக்குச் சென்றதாகக் கூறினாள். அதே நேரத்தில் கோயிலுக்குச் சென்றவன் திரும்பி வர ''சித்தனைக் கொன்ற உம்மைக் காணாது இங்கு தேடி வந்தோம்'' என்றனர். அவனோ திகைத்து ''ஐயோ அவனை நான் எப்போது கொன்றேன்! இறைவன் செயலே'' என அலறினான். அப்போது ஆசிரியனின் மனைவி சித்தன் தன்னிடம் தவறாக நடக்க முயற்சித்ததையும், தான் கதவைத் தாளிட்டுக் கொண்டு இறைவனிடம் முறையிட்டுக் கொண்டதையும் கூறினாள். பின்னர் வாளாசிரியன் தனது மனைவியுடனும் மற்ற சீடர்களுடனும் கோவிலையடைந்து ''பிரமவிட்டுணுக்களுக்கும் கிடைக்காத பெருமானே! இந்த ஏழை மீது இவ்வளவு கருணையா?'' என உருகித் துதித்தான். குலோத்துங்க பாண்டியன் நடந்ததையறிந்து ''வேற்று நாட்டினர் வந்தாலும், அவரையும் காக்கும் பரதேசி காவலனாக இறைவன் இருக்கும் கருணையை என்னென்று வியப்பேன்.'' எனக் கூறி வாட்போரில் வல்லவனான முதியோனையும் கற்புக்கரசியான அவனது மனைவியையும் நகர்வலம் செய்வித்து மகிழ்ந்தான். இவ்வரலாற்றை

''ஒரு தனி அடியார்க்கு உதவுதல் வேண்டி
மண்ணவர் காண வட்டணை எடுத்து
ஆதி சாரணை அடர்நிலைப் பார்வை
வாளொடு பெருக்கல், மார்பொடு முனைத்தல்
பற்றி நின்றடர்த்தல் உள்கையின் முறித்தல்
ஆனைத்து ஒட்டல் அணிமயிற்புரோகம்
உள்கலந்து எடுத்தல் ஓரிடம் அழைத்தல் என்று
இவ்வகை பிறவும் எதிர் அமர்ஏறி
அவன் பகை முறித்த அமர்ப் பெருங்கடவுள்
கூடல் அங்கானல்''

எனக் கல்லாடம் பேசுகிறது. பரதேசி காவலனான இறைவன் யாவரையும் காப்பானாக.

**(தொடரும்)**

வளர்ந்து வரும் வட அமெரிக்கா

# முருகன் கோயில்

அருள்முருக செளந்தரராஜ அடிகளார், கல்பாக்கம்

குன்றுதோறாடும் குமரனாகிய தமிழ்க் கடவுள் அருள் முருகன் ஆறுபடை வீட்டி லிருந்தாலும், தமிழகம் முழுவதும் ஆயிரக் கணக்கான கோவில்களை அமைத்துக் கொண்டு வீற்றிருக்கிறான். குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலைஎன்றுஎல்லா இடங்களிலிருந்தும் இன்று அருள் பாலிக்கின்றான் என்றால் அது மிகையாகாது.

தமிழகத்தில் மட்டுமல்லாது ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரம் என்று இந்தியா முழுவதும் ஆங்காங்கே கோயில் கொண்டு பக்தர்களுக்கு அருள் வழங்கி வரு கிறான்.

உலகில் தமிழர்கள் எங்கெங்கு வசிக் கிறார்களோ அங்கெல்லாம் முருகன் கோயில் கொண்டுள்ளான்.

''செங்கே ழடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிரைந்த நற் பன்னிரு தோளும்
பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்
செங்கோடைக்குமரனென
எங்கே நினைப்பினும் அங்கே யென்முன்
வந்தெதிர் நிற்பவனே''
என்று பாடுகிறார் அருணகிரிநாதர்

எங்கே நினைக்கிறோமோ அங்கே வந்து நிற்பவன் அந்த அருள்முருகன், என்னப்பன், என்குருநாதன்.

இலங்கையிலே நல்லூர், கதிர்காமம், கீரிமலை, கண்டி, கடவை, திரிகோணமலை முதலான இடங்களில் குடிகொண்டுள்ளான்.

மலேயாவிலே பத்துமலை குகை, மாத் தாண்டவர், கிள்ளான், சிகாமட், கங்கை பாட் டாளி, ஜோகூர் பாகு, காஜாங், தண்ணீர் மலை, கெர்லின், கல்லுமலை, ரசூப் ஆகிய இடங்களில் முருகனை கண்டு தரிசிக்கலாம்.

தென் ஆப்பிரிக்காவில் கிஹோர்ஷட் என்ற இடத்தில் முருகன் கோயில் உள்ளது.

அந்தமானிலுள்ள போர்ட் பிளேயரிலும் முருகன் கோயில் உண்டு; அமெரிக்காவிலே கலிபோர்னியாவில் முருகனுக்கு ஓர் ஆலயம் உண்டு. கனடா நாட்டில் ஒட்டாவா என்ற இடத்திலுள்ள இந்துக் கோயிலிலும் முருகன் இருந்து சிறப்பிக்கிறான்.

ஹவாய் தீவிலுள்ள 'கப்பா' என்ற இடத் திலும் முருகன் கோயில் உண்டு.

டெக்சாஸில் ஹூஸ்டன் நகரிலுள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்திலும் முருகனுக்கு ஓர் சிறுகோயில் உண்டு.

அமெரிக்காவில் நியூயார்க்கில் பிளஸ்சிங் என்ற இடத்தில் ஓர் விநாயகர் ஆலயமும், பிட்ஸ்பர்க் என்ற இடத்தில் ஓர் பெருமாள் கோவிலும், வாஷிங்டனில் ஓர் சிவன் கோயிலும் உள்ளது.

வட அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் எல்லாம் ஒன்றுகூடி முருகனுக்கென்று ஓர் தனிக்கோயில் அமைக்க நினைத்தார்கள். அதற் காக வாஷிங்டன் பெருநகர் பகுதியில் வட அமெரிக்கா முருகன் கோயில் 1982-ஆம் வருடம் கட்டப்பட்டது. அதன் பின் இரண்டு இல்லங்களுடன் கூடிய 11.5 ஏக்கர் குறிஞ்சி நிலம் வாங்கப்பட்டது. பல இன்னல்களுக்கு இடையில் அமெரிக்க நாட்டின் அனுமதியும் பெற்று பிரதான ஆலய கட்டிடங்களுக்கான பூமிபூஜை 1988-ல் நடந்தது.

தற்போது மேரிலேண்டில், லான்கம் என்ற ஊரில பிரின்சஸ் கார்டன் பார்க்வே என்ற இடத்தில் உள்ள குன்றின் மீது முருகன் குடி கொண்டு விட்டான்.

குன்றின் மீது இருந்து பார்த்தால் குன் றிற்கு நான்கு புறத்திலும் இரத வீதி போல நான்கு ரோடுகள் இருப்பதை காணலாம். இயற்கை சூழ்நிலை நிறைந்த ரம்யமானஇடம்.

''இறவாமல் பிறவாமல் எனையாள்
சத்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத்
தருவாயே
குறமாதை புணர்வோனே குகனே
சொற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்
பெருமானே''

என்று அழகாக அருணகிரிநாதர். இலங்கையிலுள்ள கதிர்காமத்து கந்தனைப் பற்றிப் பாடியுள்ளார்.

அந்த கதிர்காம கந்தனின் அருள், அமெரிக்காவிலும் பொங்கி பூரண அருள் பாலிக்க வேண்டுமென்று, அங்கு வளர்ந்து வரும் வடஅமெரிக்க முருகன் தலத்திற்கும் 'மேலைக் கதிர்காமம்' என்று பெயர் சூட்ட வேண்டுமென்று பல தமிழ் அன்பர்கள் விரும்புகிறார்கள்.

தமிழகத்தில் சீர்காழி என்ற ஊரில் கதிர்காம சுவாமிகள் என்பவர் ஓர் கதிர்காமகந்தன் கோயில் உண்டாக்கி அவ்வூரிலேயே சமாதியாகி உள்ளார்.


முருகனுக்கு பழனி வடபழனி, தென்பழனி, பொன் பழனி, நடு பழனி என்று இருப்பதைப் போல, சென்னிமலை, வடசென்னிமலை, திருச்செந்தூர், வடதிருச்செந்தூர் என்பதைப் போல வட அமெரிக்காவில் உள்ளவர்கள் மேலை நாட்டில் இருப்பதால் அதை மேலைக் கதிர்காமமென வழங்க நினைக்கிறார்கள்.

தற்போது இக்கோயிலில் விநாயகரும், முருகன் மட்டுமே இருக்கிறார்கள். இங்கு நடத்தப்படும் அர்ச்சனைக்கு 5 டாலர்கள். சகஸ்ர நாம அர்ச்சனைக்கு 25 டாலர். அபிஷேகத்திற்கு 51 டாலர் என்று கட்டணம் வழங்கப்படுகிறது. ஒரு டாலர் என்பது சுமார் 20 ரூபாய் ஆகும். கணக்கு போட்டு பார்த்துக் கொள்ளுங்கள். மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள். வெளியூரில் இருப்பவர்கள் பணம் அனுப்பினால் பிரசாதங்கள் தபாலில் அனுப்பப்படுகின்றன. இது அமெரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கு மட்டுமே. இந்தியாவிலிருந்து நேரடியாக பணம் அனுப்ப இயலாது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வளர்ந்துவரும் இவ்வாலயத்திற்கு டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள், சைவ சித்தாந்த பீடம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள், கர்நாடக மாநிலம் சிருங்கேரி சாரதா பீடம் ஸ்ரீ பரமானந்த பாரதி சுவாமிகள் முதலியோர் விஜயம் செய்துள்ளார்கள். தமிழகத்திலிருந்து குன்றக்குடி அடிகளாரும், காளிகாம்பாள் கோயில் சாம்பசிவ சிவாச்சாரியாரும்கூட விஜயம் செய்துள்ளார்கள்.

மதுரை கி. பழனியப்பனார் என்பவர் இந்த முருகனைப் பற்றி ''கேளாது பொன் கொடுத்து கேட்டவரம் பெற்றிடுக'' என்ற தலைப்பில் ஓர் பாடல் பாடுகிறார்.

''கைப்போது மலர்தூவிக் கந்தாவுன் புகழ்பாடி
முப்போதும் கைக்கூப்பி முன்னிற்க
விழைகின்றோம்
இப்போதே வாஷிங்டன் எழில் குன்றில்
எழுந்தருளி
எப்போதும் இன்னருளை எல்லோருக்கும்
புரிந்திடுக.''



''வீழாது செய்கருமம் வெற்றியுடன்
முடித்திடவும்
தாழாது தமிழ் மக்கள் தம்புகழை நாட்டிடவும்
ஆழாழி கடல் கடந்தோன் ஆண்டவரின்
கோயிலுக்கே
கேளாது பொருள் கொடுத்துக் கேட்டவரம்
பெற்றிடுக''

ஆண்டவரின் கோயிலுக்கு கேளாது பொருள் கொடுத்து என்பதைப் போல தமிழக அரசின் முன்னாள் முதல்வர் பொன்மனச் செம்மல் மறைந்த மாமேதை டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் வட அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் கட்டுகின்ற கோயிலுக்காக பிரதான விக்கிரகங்களை தமிழக அரசின் சார்பில் கொடுப்பதற்காக சுமார் இரண்டு லட்சத்துநாற்பத்தேழாயிரம் ரூபாய் இந்து அறநிலையத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலுக்கான பிரதான கற்சிலைகள் முருகன் வள்ளி தெய்வயானை, விநாயகர், சிவலிங்கம், பார்வதி, அருணகிரி, வீரபாகு, அகத்தியர், இடும்பன் ஆகியவற்றை மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைக்கல்லூரி திறம்பட செய்து முடித்து வைத்துள்ளனர்.

பஞ்சலோக விக்கிரகங்களாக முருகன், வள்ளி, தெய்வயானை, விநாயகர் முதலியவற்றை கும்பகோணம் சுவாமிமலையிலுள்ள பூம்புகார் கலைக்கூடம் மூலமாக செய்யப்பட்டு அமெரிக்காவுக்கு அனுப்புவதற்குத் தயாராக உள்ளன.

முருகன் சிலை ஆஜானுபாகுவாக ஆறு அடி உயரம் உள்ளது.

வட அமெரிக்கா முருகன் ஆலயம் கட்டுவதற்காகத் திட்டமிட்டுள்ள தொகை சுமார் ஆறு லட்சம் டாலர்கள் ஆகும்; அதாவது 1 கோடியே 50 லட்சம் ரூபாய்.

இந்த ஆலயத்தில் கும்பாபிஷேகம் 1992-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வாக்கில் நடத்த திட்டமிட்டுள்ளார்கள்.

''பாசவினைப் பற்றில் நான் உழல்வதும்
என்மடமை
ஆசை அகற்றி அம்மடமை போக்குவதும்
உன்கடமை
கடமையுடன் வந்தென்னை நீ காப்பதும்
இனிமை
இனிமை, இனிமை, வாஷிங்டன் திருமுருகே
நீயே இனிமை.''

என்று வெகு இனிமையாக கூறுகிறார் புதுப்பட்டி நாகப்பன் இந்த வாஷிங்டன் முருகனைப் பற்றி.

இக்கோயிலுக்கான சிலைகளைச் செய்த பெருமை தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையையே சாரும். தற்போது அறநிலைய ஆட்சித் துறையை சார்ந்த திரு முத்தையா ஸ்தபதி அவர்கள் அமெரிக்கா செல்லும் போதெல்லாம் அக்கோயிலுக்குச் சென்று கட்டுமான பணிகளையும் கவனித்து மேற்பார்வையிட்டு வருகிறார்கள்.

சென்ற ஏப்ரல் மாதம் சீர்காழி கோவிந்தராஜனின் புதல்வர் டாக்டர் சிவ சிதம்பரம் தன் குழுவுடன் சென்று அங்கு இன்னிசை நிகழ்ச்சியும் நடத்தி வந்துள்ளார்.

வடஅமெரிக்கா முருகன் ஆலயத்திலுள்ள குழுவில் அங்கம் வகிப்பவர்களைப் பார்ப்போம். குருசுவாமி, சரவணபவன், சுப்ரமணியன், குமரேசன், பால சுப்பிரமணியராஜா, சிவகுமரன், குமாரச்சந்திரன், சண்முகராஜா, குப்புசாமி என்று பெயர்கள் அனைத்தும் முருகன் பெயர்களே. முருகனே பல ரூபங்களில் ஒளிந்திருந்து வேண்டுவனவற்றை செய்து கொள்கிறான் என்றால் அது மிகையாகாது.

அந்த முருகனுக்கு கேளாது பொன் கொடுத்தோர் பல்லோருண்டு. சென்னையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர், வெள்ளியில் முருகனும் விநாயகரும் பொறிக்க ஒரு ரூபாய் அளவுள்ள 300 டாலர்களை அன்பளிப்பாக அளித்துள்ளார். கோவையைச் சார்ந்த அன்பர் வெள்ளி வேலை அன்பளிப்பாக செய்து கொடுப்பதாக வாக்களித்து விட்டார். நல்லி செட்டியார் அவர்கள் அந்த முருகனுக்காக சுமார் ரூபாய் 18,000-க்கு பட்டாடைகள்வழங்கியுள்ளார்கள்.



## தேவா திருவருள் செய்குவாய்

புலவர் பொன். திருக்கண்ணபுர சுப்பிரமணியன்

ஆயிரம் மலர்தூவி சௌரிராசா உன் திருநாமம்
அன்புடன் யாம்பாடுவோம்-தினமும்
அன்புடன் யாம்கூடுவோம்; உன்

கோயிலை வலம்வந்து கொடிமர நிழல் நின்று
குளிர்மதி முகம் தேடுவோம்; உன்
குளிர்மதி முகம் தேடுவோம்; எம்

தாயென வாழ்கின்ற கண்ணபுர நாயகி
தனைத் தினம் யாம் நாடுவோம்-அன்னை
தனைத் தினம் யாம்நாடுவோம்-எம்

வாயினால் துதிசெய்து வணங்கியுன்
வாசலில் தினம் கூடுவோம்— திரு [அருள்காண
வாசலில் தினம் கூடுவோம்—உன்

சேயென வருபவர் சீர்பெற அன்புடன்
திருவருள் நீசெய்குவாய்! தேவா
திருவருள் நீ செய்குவாய்.

வளர்ந்து வரும் வட அமெரிக்க முருகன் ஆலயத்தின்திருப்பணிவேலைகளைகவனிப்பதற்காகவும், அதற்கான உதவிகளை செய்யவும் நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தமிழகத்தில் சென்னையில் வட அமெரிக்க முருகன் கோயில் நிர்வாகக்குழு 11 கனால் பேங்க் ரோடு, கஸ்தூரிபாய் நகர், அடையாறு சென்னை-20 என்ற இடத்தில் டாக்டர் ஜே. ஜெகதீசன் என்பவரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

அருள்முருகா திருமுருகா
ஆனந்த நல்முருகா-வட
அமெரிக்காவில் அமர்ந்துவிட்ட
அருள் நிதியே பெருமதியே
வாஷிங்டனில் வளர்ந்துவரும்
வள்ளலே வரமளிக்கும் என்குருவே
கருணை புரியும் கடம்பனே-மேலை
கதிர்காம கந்தவேளே.

இது கனவு நிலைக்குரியது. யாதனா சரீரம் என்பது நரகம் சென்று (இறந்த பிறகு) துன்பம் உழப்பது. அதுவே பின்சுவர்க்கம் சென்று இன்பம் துய்க்குங்கால் பூதசாரதேகம் எனப் படும். இதனைப் பின்வரும் பாடல்களாலும் அறியலாம்.

''துறக்கப்படாத உடலைத் துறந்து, வெம் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால் இருவிசும்பு ஏறுவன்; ஏறிவந்து
பிறப்பன்; பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொலோ என்று என் உள்ளம்கிடந்து மருகிடுமே''

— திருநாவுக்கரசர்.

பூதனா சரீரம்போனால் புரியட்ட ரூபந்தானே
யாதனா சரீரமாகி இன்பதுன்டங்க ளெல்லாம்
நாதனார்ஆணை யுய்க்க நரகொடு சுவர்க்கந்துய்த்துத்
தீதிலா வணுவாய் யோனிசேர்ந்திடும் சீவனெல்லாம்.

— சிவஞானசித்தியார்.''

''புலாலுடை யாக்கைப் பலாலமது அகற்றி,
அற்றம்இல் உயிர்எனப் பெற்ற நெற்றிரளைப்
பூதசாரத்தனு, பூதமகாதனு
பூத பரிணாமம் புகலுறும்யாக்கை, ஆம்
மூவகைப் பண்டியின் மேவர ஏற்றிப்
பொன்னிலம் நிரயம் இந்நிலம் என்னும்
இடம்தொறும் ஆங்கவை அடங்கவைத்து....''

— பட்டினத்தடிகள்
(திருக்கழுமலமும்மணிக்கோவை)

இத்தகைய திருப்பாட்டுக்களினால் உயிர் களுக்கு மறுபிறப்பு உண்டு என்பது உண்மை யாயின், முற்பிறவிகளில் அனுபவித்தவற்றை உயிர்கள் இப்பிறவில் ஏன் அறிவதில்லை? என்னும் ஐயம் தெளிவிக்கப்பட்டதுடன் பஞ் சாக்கினிவித்தை (உயிரானது முறையே சுவர்க்கம், மேக மண்டலம், நிலம், தந்தை, தாய் என்னும் ஐந்து இடங்களில் தங்கிவந்து பிறக்கும் தன்மை)யின் இயல்பும் விளக்கப் பெற்றன.

தவிரவும், மணிவாசகப் பெருமானும், பட்டினத்தடிகளும், அருணகிரிநாதர் அவர் களும் முற்பிறவி மறுபிறவி உண்டு என்பதனை மிகவும் தெளிவான முறையில் விளக்கியுள்ள பாடல்களும் நம் கவனத்திற்குரியனவாகும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச் .
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்

— மாணிக்கவாசகர்

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பிள்ளை எத்தனை எத்தனைப் பிள்ளையோ
பிள்ளை எத்தனை எத்தனை பெண்டிரோ
முன்னம்எத்தனை எத்தனை ஜென்மமோ
மூடனாய் அடியேன் ஒன்றும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை ஜென்மமோ
என் செய்வேன் கச்சி ஏகம்பநாதனே

— பட்டினத்தடிகளார்

அருணகிரி நாதர் ''எழுகடல் மணலை அளவிடின் அதிகம் எனதிடர் பிறவி அவதாரம்'' எனக் கூறியிருக்கின்றார்கள்.

இருவினையொப்பு என்றால் என்ன? இரு வினை ஒப்பு என்றால் வேண்டுதல் வேண்டா டாமையாகிய நிலை; விருப்பு, வெறுப்பு அற்ற நிலை; இஃது தூய நிலை அசட்டுத்தனமன்று, அருள்சேர்ந்த நிலை; இன்ப துன்பங்களை ஒன் றாக நோக்கும் நிலை; இன்பத்திடை தனி மகிழ்தலும், துன்பத்திடைத் பெரிதும் அழுங் கலும் கூடா. அறிவு கொண்டு அருளுடன் ஒன்றாக அவற்றைக் காண்பது தான் இரு வினையொப்பு. (மலபரிபாகம்)

' பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானுன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாத தோரின்பமே வருந்துன்பமே துடைத்தெம்பிரான்'
உணக்கிலாத தோர் வித்துமேல் விளையாமல் என்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டிகூாய் கழுக்குன்றிலே''

— மணிவாசகப்பெருமான்.

மணிவாசகப் பெருமானார் ஆண்டவனைப் பிடிக்க எண்ணிப் புறம் புறம் திரிந்தார். அழு தால் உன்னைப் பெறலாமே என்று அழுது அழுது கற்றாவின் மனம் போலக் கசிந்து உருகி வேண்டினார்; அவ்வாறு செய்யவும் செய்தார்; ''வருக என்று அருள் புரிவாயே'' என்று கதறி னார். ஆனால் ஆண்டவனோ சிக்கெனச் சிக்கி னான் போலக் காட்டிக் கழன்றார். எங்கே? திருப்பெருந்துறையில்.

மணிவாசகர் கைநெகிழவிட்டார். பலதிருக்கோலங்களில் வந்தான் ஆண்டவன். மணிவாசகருக்குக் கிட்டினார்; அகப்பட் டார். எங்கே? திருக்கழுக்குன்றத்தில். எப் போது? மாணிக்க வாசகரது வினையொத்த பின், ஆக, இருவினை யொப்பு நேர்ந்த பின் னர்தான் ஆண்டவன் (திருவருளாற்றல் சிவ குருவாக வெளிப்பட்டு வந்து) மாணிக்க வாசக ருக்குத் திருக்கோலங்காட்டினார். எனவே நாம் முன்னதாக இருவினையொப்பு அடைய வேண்டும். இல்லையானால் இல்லை! இல்லை!




**அன்பு அருணாசல அடிமை**

**திருப்பாதிரிப்புலியூர்**

இருவினையொப்பு (மலபரிபாகம்)

''அத்திமுகனடி நித்தம் நினைபவர்
சித்தி திருவொடுமுக்தி பெறுவரே''

''அவனே தானேயாகியஅந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடுவல்வினை இன்றே''
சிவஞானபோதம்

குருவணக்கம்.

போந்தனை நேர் ஆண்ட பொருவில்
சிவகுருவே
மாந்தர் இருளகற்று மாசோதீ— தீந்தமிழில்
நின்னை வழுத்திடுவேன் நின்தாள்
உளங்கொள்வேன்
என்னையும் உய்விப்ப தென்று''.

''அல்லையீது அல்லையீதுஎன மறைகளும்
அன்மைச்
சொல்லினால் துதித்து இளைக்கும் இச்சுந்தரன்
ஆடற்கு
எல்லையாகுமோ என் உரைஎன் செய்கோ
விதனைச்
சொல்லுவேன் எனும்ஆசை என்
சொல்வழிகேளா''

— பரஞ்சோதி முனிவர்

''அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்
இல்லார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு''
— திருக்குறள்

சிவநேசச் செல்வர்களே வணக்கம் பலப்பல.

உயிர்களுக்கு மறு பிறவி உண்டு என்பதனையும், முற்பிறவி உண்டு எனபதனையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். எப்படி?

இறைவன் தன்னுடன் நீக்கமின்றி நிற்கும் ஆணையைக் கொண்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்கிறார். விருப்பு,வெறுப்பு என்றஇருவினை நியதி கொண்டு மாயை கூடியும், விரிந்தும் இப்பிரபஞ்சத்தை ஆக்கலும்; அழித்தலும் செய்கிறார். தானே இச்சேதனா, சேதனப் பிரபஞ்சமாக மாறியும் அத்துடன் தாக்காது வேறாகியும், உடனுமாயும் நின்று காலச் சக்கர நியதிப்படிபுவனத்தைப் போக்கு வரவு புரிகின்ற சம்சாரத்தில் ஈடுபடுகிறார். உயிர்களையும் அவைகளின் நல்வினை, தீவினை என்ற இருவினைக் கேற்ப கர்மப் பிரதிகர்ம நியதிப்படியும், புனர் ஜென்ம நியதிப்படியும் உலகில் டல்வேறு அச்சுமாறிப் பிறத்தல், இறத்தலைச் செய்வித்தும் திரிலோகங்களிலும் போக்கு வரவு புரிவித்தும் சம்சாரத்தில் அழுத்தி இன்ப துன்ப போக போக்கியங்களை ஊட்டுவித்து பக்குவப்படுத்தியும் அனுக்கிரகிக்கிறார். இதனை ''சிவஞானபோத'' நூலின் கண் மெய்கண்டார்

''அவையே தானேயாய், இருவினையிற்
போக்குவரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே''— எனக் கூறியிருக்கின்றார்.

தவிரவும், கண், காது, மூக்கு வாய், மெய் முதலிய உறுப்புக்களை உடைய தூல தேகம் அழிந்துவிடத்து (படைப்புக் காலம் தொடங்கிச் சங்காரகாலம் அளவும்) நிலை உயிரானது அப்பூதசாரம் முதலிய உடம்பின் உண்டாக, சுவர்க்கம், நரகங்களில் சென்று இன்ப துன்பங்களை அனுபவித்து, நனவின்கண் கண்டவற்றை கனாக் காணும் காலத்தில் (மறந்து அறிவு வேறு பட்டாற்போல) முன்பு தூல தேகம், சூக்கும தேகம், பூதாசாரதேகம் ஆகியவற்றில் அறிவு வேறுபட்டு, அனுபவித்தவற்றை மறந்து மனம் செலுத்துவதனால் புண்ணிய பாவ இயல்புகளுக்கு ஏற்ப, சூக்கும தேக மாத்திரையாய்ச் சென்று ஒரு கருவியின் கண் சென்று பிறக்கும்.

''கண்ட நனவைக் கனவுணர்வில் தான் மறந்து
விணபடர்ந்தத் தூடுவினையினால்—கண்
செவிகெட்டு
உள்ளதே தோற்ற, உளம் அணுவாய்ச் சென்று,
மனம்
தள்ள விழும் கருவில்தான்''

— சிவஞானபோத வெண்டா.

திரிலோகங்கள் மூன்று. அவை : 1. பூலோகம், 2. புவர்லோகம், 3. சுவர்க்க லோகம்.

உயிர்களுக்கு பூதனாசரீரம் (தூலம்) புரியட்டக சரீரம் (சூக்கும) யாதனா சரீரம் (தூலசாரம்)என்னும் மூன்று தேகங்கள் உண்டு. ஐம்புதங்களால் அமைந்தது தூலதேகம். இது நனவு நிலைக்குரியது. சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மனம், புத்தி, அகங்காரம் என்னும்எட்டினால் அமைந்தது சூக்கும தேகம்.

''இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தால் தன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே''

— திருமந்திரம்.

மேலும், இருவினையொப்பு என்பது நமது உள்ளக்கிடக்கையில் நல்வினையும் தீவினையும் ஒத்த ஆதல். பத்துத் தீவினைகளுக்குப் பத்து நல்வினைகள் செய்தால் சரியாய் போயின என்கிற அந்த ஒப்பு அன்று. நல்வினைப் பயன் எந்த அளவில் ஈட்டிய பயனாகும்? அன்னவாறே தீவினைப் பயனும் கூட்டல், கழித்தல் என்கிற கணக்கில் அடங்காது. நல்ல வினை செய்தால் நல்ல பயன் அடையலாம் தீவினை செய்தால் அதற்கு ஏற்ப தீயபயனை அடைய நேரும், காரண காரியமாக அவற்றின் பயனைத் அடைந்தே தீர வேண்டும். கையை நெருப்பிடை வைத்துச் சுட்டுக் கொண்டதற்குத்தண்ணீரிடை வைத்தல் சுட்டதைநீக்கியது ஆகுமா? சுட்டது சுட்டதே. அதன் பயனையும் அனுபவிக்க வேண்டும். தண்ணீரிடை வைத்தால் வெந்தது போகாது.

''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

''பயன்தூ க்கார் செய்த உதவி
நயன்தூ க்கின்
நன்மை கடலிற் பெரிது''.

என்னும் குறட்பாக்களை ஓர்க. ஒருவகை நன்றி ஞாலத்தினும் மிகப் பெரிது. இன்னொரு வகை நன்மை (உதவி) கடலினும் பெரிநு என்று சுட்டிச் சொல்ல இயலாது. எனவே நல்வினைப் பயனையோ தீவினைப் பயனையோ ஒருவரையறையிட்டுக் கூ ந இயலாது. ஒஃ றினின்று ஒன்றைக்கழிக்கவும் இடலாது இவற்றால் ஒவ்வொரு வினையின் பயனையும் தனித்தனியாக அடைந்தே தீர வேண்டும். நல்வினையும் தீவினையுமான இருவினையும் பிறவியைத்தரும் ஆனதால் பிறவியற்று போவதற்கு இருவினையும் நம்மிடமிருந்து அகலவேண்டும். தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் ''வேண்டுதல்வேண்டாமையிலான்'' என்று இறைவனைக் குறித்துக் கூறினார். இருவினையும இருள் சேர்ந்தனவே; பிறவியைத் தருவனவே. ''இருவினையொப்பு'' என்பதற்கு ஏற்ப சான்றோர்கள் எப்படி இருவினையும் அநுபவித்துக் காட்டினார்கள். எடுத்துக்காட்டாக:- தருமர் மகிழ்ச்சிக்குரிய காலத்தும், துயருறும் காலத்துப் ஒத்திருக்கும் உள்ளத்தை உடையவரென்று நள வெண்பா பாடிய புகழேந்திப் புலவர் தருமனை விளித்துக் குறித்துள்ளார் அதாவது ''மெய்த்திரு வந்துற்றாலும், வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்துரவோனே.'' என்று மொழிந்திருக்கின்றார். இவ்வாறு சம நிலை உடையவர் தருமர். இந்த நிலைதான் இருவினையொப்பு அல்லது அதற்கு அடிப்படை.

இதேநிலையை இராமபிரான் பாட்டும் கம்பர் தமது இராமாயணத்தில் தமக்கேயுரிய தனிப்பான்மையில் காட்டுகின்றார். எப்படி? சீதா பிராட்டியானவர் அசோக வனத்திலிருந்த



போது எந்நிலையிலும் மலர்ந்திருக்கும் அவரது முகத்தை உன்னுவாளாயிருந்தாள் என்பதைக் கம்பர் பின்வரும் செய்யுளால் உணர்த்துகின்றார். அதனை நோக்குவோம்:-

''மெய்த்திருப்பத மேவென்ற போதினும்
இத்திருத்துறந்தேகென்ற போதினுஞ்
சித்திரத்தி னலர்ந்த செந்தாமரை
ஒத்திருக்கு முகத்தினை யுன்னுவாள்''

இதன் கருத்து, இராமன் நாடு நகரம் ஆட்சியெல்லாம் தனது எனச் சொல்லக் கேட்டபோதும், இத்திருவெல்லாம் துறந்து தான் காட்டுக்குப் போக வெண்டுமென்று சொல்லக் கேட்டபோதும் அவரது முகம்(இராமபிரானின் முகம்) ஒரே நிலையிலிருந்தது என்பது.

சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை போன்றிருந்தது அவர் முகம் என்னுமிடத்துப் பெரியதோர் உண்மையும் நயமும் காணவேண்டும். செந்தாமரை எப்பொழுதும் மலர்ந்திராது. பகலில் (குளத்திலிருக்கும் தாமரை) மலர்ந்தும் இரவில் குவிந்தும் இருக்கும். ஆக இராமன் முகத்தை வெறுஞ்செந்தாமரைக்கு ஒப்டாகக் சொன்னால் ஒரு வேளை மலர்ச்சியும் இன்னொரு வேளை முகிழ்ப்பும் குறிக்கும். இயற்கையிலுள்ள தாமரையின் இயல்பு இது.ஆனால் சித்திரத்தில் எழுதிய தாமரையாயிருந்தால் எப்போதும் மலர்ந்தே இருக்கும். இந்த நிலையும் இருவினைக்குச் சமம் அல்லது அதற்கு அடிப்படை என்பதாகும்.

சேக்கிழார் பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தில் அடியார்க் கூட்டத்தைக் குறிப்பிடும்போது

''கேடும்ஆக்கமும்கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.''

என்று அடியார் சிறப்பினைச் கூறுகின்றார்.

அடியார்களுக்கு ஓடும் செம்பொன்னும் ஒன்றுதான். பொதுவாக இந்த இலக்கணம் எல்லா அடியாரிடத்திலும் காணலாம். ஆனால் மிகவும் சிறப்பாகச் சைவ சமயகுரவர் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசரிடத்து இவ்விலக்கணம் தெளிவுறச் சொல்லியிருக்கக் காணலாம். திருப்புகலூர் திருக்கோயிலில் உழவாரம் செய்து கொண்டிருந்த காலத்து, (அப்பரடிகள்)

செப்பொன்னும் நவமணியும் சேண்விளங்க,' ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள் பருக்கை யுடன் ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத்தினில் ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புக எறிந்தார்'

என்று சேக்கிழார் பெருமான் மிக அழகாகக் கூறுகின்றார். இந்த நிலைதான் இருவினையொப்பு நிலை. இந்நிலையில எல்லாம் ஒன்றே. உயர்வு, தாழ்வு எல்லாம் சமம்.

இவ்வாறு இன்ப துன்பங்களை ஒக்க நோக்கும் இயல்பினை நாம் அடைதல் வேண்டும். எப்படி? இவ்வியல்பினை அடைவது சாமானியமானதன்று; மிக அரிது. நல்ல இலக்கியச்சுவைகளைக் கொண்டு, இலக்கியங்களின் மூலமாக இவ்வியல்பினை அடையலாம் என்பது ஒருதலை. நல்ல இலக்கியங்களை ஓதும் பழக்கம் வாய்ந்த மனம் நல்லதையே எண்ணும். அழகினையே காணும், ஏற்றத் தாழ்வுகளால் அலைப்புறாது;எல்லாவற்றையும் இன்பமாகவே காணும்; மனம் சலனமடையாது; அசைவு கொள்ளாது. எனவே இலக்கியப் பழக்கம் இந் நல்லியல்பிற்கு நம்மை ஈர்த்துச் செல்லும். அதனால் மனம் கலங்காநிலையை அடையும். அதுதான் இருவினையொப்புக்கு வழியாகும். மீண்டும் பிறவாமைக்கு வழியுமாகும். மீண்டும் பிறவாமைக்கு நெறிமுறை உண்டா? அநேகம் உண்டு. என்ன? எடுத்துக்காட்டாக ''நெறி' என்றால வழி; ''முறை'' என்றால் ஆகமம்; ஆ-என்றால பசு; பசு என்றால் உயிர் ''கமம்'' என்றால்நிறைவு. ஆகமம் என்றால் (இறை நூல்) திருஐந்தெழுத்தாகும். எனவே உயிரின் அறிவை நிறைவிப்பது திருவைந்தெழுத்தேயாகும் என்பதில் ஐயம் வேண்டாம். திருவைந்தெழுத்து ஓதி உய்வு அடையலாம். மேலும் இப்பாட்டினை நினைவு கூறுதல் நன்று.

''இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்''.

நிற்க, நல்வினை, தீவினை என்று வினையை இரண்டாக கூறுவது போல. அது ஆன்மாவை வந்து அடையும் தன்மையை நோக்கி, மூன்று வகைப்படுத்தி கூறுகின்றார். அவை:—

— 1. ஆகாமியம்: இப்பிறப்பில் செய்யும் வினைகள்.

2. பிராரத்தவினை; சென்ற பல பிறவிகளில் செய்த வினையின் பலாபலனை இப்பிறவியில் அநுபவித்துத் தீர்க்க வருவது.

3. சஞ்சிதவினை; பல பிறவிகளிலுஞ் செய்த வினைகள் ஆன்மா (உயிர்கள்) அநுபவிக்க தொகுப்பாகச் சேர்ந்துவருவது.

நாம் இறக்கும் போது நம்முடைய செல்வமோ, மற்ற சொந்த பந்தங்களோ சேர்ந்து உடன் வருவதில்லை. நாம் செய்த புண்ணிய பாவங்களே (நல்வினை-தீவினை) இறந்த பின்னும் கூடவரும் என்பதனைப் பட்டினத்தடிகளார்- ''பற்றித் தொடரும் இருவினை புண்ணியபாவமுமே'' என கூறியிருக்கின்றார்.

உயிர்கள் செய்யும் வினைகளுள் பழவினை (சஞ்சிதம்) குருமூர்த்தியின் திருநோக்காலும், ஏன்றவினை (பிராரத்தவினை) உடல் ஊழாலும், வருவினை (ஆகாமியம்) குருவருளால் பெற்ற ஞானத்தாலும் கெடும். ''ஏன்ற வினை உடலோடு ஏகும்; இடையேறும் வினைதோன்றில் அருளே சுடும்'' என்னும் திருவருட் பயனாலும் உணரலாம்.

அருட்குரவரில் தீக்கையால் மும்பலக்கட்டுகளும், வலியழியப்பெற்று ஏன்ற உடலுடன் இவ்வுலகில் நிலவும் பொழுது பழக்க வயத்தால் முன் தளைத்திருந்த மல விளைவுகள் தாக்காது ஒழியாது. பெருங்காயம் வைத்து எடுக்கப்பட்ட கலத்தில் அதன் மணம் மெல்லியதாய் வீசுமாறு போல, நுகர்வினையும்; ஏன்ற உடல் வழி வந்து தாக்கும். முதலும், முடிவும் இலலாத திருவைந்தெழுத்தை (நமசிவாய-தூல பஞ்சாட்சரம்; சிவாயநம-சூக்கும பஞ்சாட்சரம்) குருவருளால் உணர்ந்தவாறு எண்ண அம்மலவழி வரும் துன்பங்கள் (இருவினைகள்) தாக்க மாட்டா. அருள் நெறியினின்றும் வேறு படுத்தவும் மாட்டா. இதோ இக்கருத்தமைந்த பாடல்கள்.

''பந்தமா னவைய றுத்துப் பவுதிகம் உழலும் எல்லைச்
சந்தியா தொழியாது இங்குத்தன்மைபோல வினையும் சாரும்
அந்தம் ஆதிகள் இல்லாத அஞ்செழுத்து அருளினாலே
வந்தவாறு உரைசெய்வாரைவாதியா பேதியாவே.'
— சிவப்பிரகாசம்

''அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே''
— திருமந்திரம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே''.
— திருமந்திரம்

'பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வாகையாகு மாபோற்
குருபரிசித்த குவலயம் எல்லாந்
திரிமலந்தீர்ந்து சிவகதி யாமே''
— திருமந்திரம்

'விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணியப் புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே.''
— திருஞானசம்பந்தர்

''நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தையாற் றமிழ் ஞாசைப் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந்தேத்தவல் லாரெல்லாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே''.

## திருமலையிலுள்ள ஏழுமலைகளின் திருப்பெயர்கள்

1. ரிஷபாத்ரி
2. அஞ்சனாத்ரி
3. நீலாத்ரி
4. கருடாத்ரி
5. நாராயணாத்ரி
6. சேசாத்ரி
7. வெங்கடாத்ரி.

ஆகவே இத்தகைய தத்துவ ஞானமாகிய திருப்பாட்டுகளை அருள் நூல், பொருள் நூல் ஓதிவருவோமானால் இருவினையொப்புக்கு வழியாகும். பிறப்பு அறும். உயிர் சிறப்பு பெறும். சிறப்பு— முத்தி.

இருவினையொப்பு அடைந்த உள்ளம் பலபரிபாகப் இலேசில் கொள்ளும், கொண்டால் மும்மலப்பபகள் ஓடும். நாம் அவற்றினின்றும் நிவர்த்தி பெறுவோம். நம்மிடமிருந்து ''நான், எனது'' என்னும் அகந்தையும், மமதையும் அகன்றுவிடும். அவை அகன்று விட்டால் ஆண்டவனருள் (சிவலோகம் வெளிப்பட்டு வந்து) சித்தி நன்கு நம்மிடத்துப் பதியும். இதுதான் (அருள்) சத்தி நிபாதம் எனப்படும். சத்தி நிபாதம் நாம் ஆண்டவனுள் பதிந்து பதிந்து, பிறகு சாலோக சாமீப சாரூப சாயுச்சியத்தைப் படிப்படியாக எளிதில் அடையலாம். (சாலோகம்-சிவனுலகம்; சாமீபம்-சிவனண்மை; சாரூபம் — சிவனுருவாதல் சாயுச்சியம்-சிவனாதல்) ஆக ஆண்டவனோடு இரண்டற கலக்கும் நிலைக்கு அடிப்படையானது இருவினையொப்பு. கீழ்க்காணும் திருப்பாடல்களும் நம் கவனத்திற்குரியனவாகும்.

''இருவினையொத்திடஇன்னருட் சத்தி
மருவிட ஞானத்தில் ஆதன மன்னில்
குருவினைக் கொண்டருட் சத்திமுன்கூட்டிப்
பெருமல நீக்கிப் பிறவாமை சுத்தமே''
— திருமந்திரம்.

''இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசன்தன் சத்திதோயச்
குருவருள் பெற்று ஞானயோகத்தைக் குறுகி முன்னைக்
திரிமலப் அறுத்துப்பண்டைச்சிற்றறிவொழிந்து ஞானம்
பெருகி நாயகன்றன் பாதம் பெறுவது சுத்தமாமே.''
— சிவஞானசித்தியார்.

''அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகிஇறைபணிநிற்க
மலமாயை தன்னொடுவல்வினை இன்றே''.
— சிவஞானபோதம்

எனவே, மெய்யன்பர்களே! அருளாளர்கள் அருளிய நூல்களையும், பொருள் நூல்களையும் நாளும் நலமுற ஓதி இறுதியில் பிறவியற்றுப்பேறா இன்ப நிலையை எய்துவீர்களாக. (இறையருள் அடைவீர்களாக)

செம்பொன்னம்பலம்
திருவம்பலம்
திருச்சிற்றம்பலம்

# கந்தவேள் கருணை

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

(52)

சுபுத்தி, புத்திசுரசை, திருது, துமசை, சிரியை, சீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, சத்தி, சாந்தை, வபு என்ற பதின் மூன்று பெண்களைத் தருமதேவதைக்குத் திருமணம் செய்து கொடுத்தான். கியாதி, சம்பூதி, சன்னதி, மிருதி, பிருதி, ஊற்சை, அநசூயை, சுவாகா, கமை, சுவதை என்ற பத்துப் பெண்களைப் பிருகு, மரீசி, புலத்தியர், அங்கிரஸ், புலகன், வசிட்டர், அத்திரி, அக்கினி, நிரது, பிதரா என்னும் முனிவர்களுக்கு முறையே திருமணம் செய்துகொடுத்தான். அவர்கள் அனைவரும் பல ஆண் மக்களையும் பெண் மக்களையும் பெற்றெடுத்தனர்.

இவ்வாறு பரந்த கிளைகளோடு கூடிய தட்சன் பின்னும் நட்சத்திரக் கூட்டத்து இருபத்தேழு பெண்களைப் பெற்றான். அவர்களை அழகு மிகுந்த சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்து ''நீ எல்லோரிடத்தும் சமமாக அன்பு பாராட்டுவாயாக'' என்று கூறினான். சந்திரனும் அவ்வாறே நடந்து வந்தான். சில காலம் பொறுத்து அவர்களில் அழகுமிக்க கார்த்திகை, ரோகிணி என்பவரிடம் மட்டும் அதிக அன்பு செலுத்தி மற்றவர்களைப் புறக்கணிப்பானாயினான். அவர்கள் சிலகாலம் பொறுத்தனர். பின்னர் தந்தையாகிய தட்சனிடம் போய் அவன் பாதத்தில் விழுந்து அழுது தங்கள் குறையை தெரிவித்தனர்.

தட்சன் பெருங்கோபம் அடைந்தான். ''சந்திரன் பேரழகன் என்று கருதி உங்களை அவனுக்குத் தந்தேன். மனைவியர்களிடம் சமமாக நடவாமல் என்னையும் உங்களையும் உதாசீனஞ் செய்தான். அவனுடைய அகந்தை என்னே? அந்த மூடன் நாளுக்கு ஒரு கலையாக தேய்ந்து ஒய்ந்து மாய்ந்து போவானாக'' என்று சாபமிட்டான்.

சந்திரனுக்கு நாளுக்கொரு கலையாகத் தேய்ந்தது. அறவழியில் வராத செல்வம்போல் ஆயிற்று. இன்னும் ஒரு கலைதான் எஞ்சியிருந்தது. அவன் அஞ்சி இந்திரன் பால் சென்று தன் குறையைக் கூறி முறையிட்டான்.

இந்திரன் அவனைத் தழுவி, 'சோமனே! உனக்கு இப்படி ஒரு துயரம் நேர்ந்ததா? நீ முன்ப ஒரு சமயம் திருக்கயிலாய மலையில் விநாயகருடைய பெருவயிற்றையும் அவர் கையிலிருந்த மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய். விநாயகர் வெகுண்டு ''சண்டாளனாகக் கடவது'' என்று உன்னைச் சபித்தார்; அதனால் அனைவரும் உன்னைக் காணவும் வெறுத்தார்கள். பிரமதேவர் வேண்ட விநாயகர் கருணை கூர்ந்து ஆண்டுக்கு ஒருநாள் ஆவணி மாத சதுர்த்தியன்று மட்டும் நீசனாக இருக்கட்டும் என்று அருள்புரிந்தார். ஆவணி சதுர்த்தியில் மட்டும் உலக மக்கள் உன்னைப் பார்க்காமல் விநாயகரை வழிபட்டு வருகின்றார்கள். இப்படி ஒரு துயரம் உனக்கு இருக்க இப்போது மேலும் ஒரு துயரம் நேர்ந்தது. ''பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்ற பழமொழி போல் உன் நிலையமைந்தது. ''மதியே நீ மதியற்றாய், பிரமதேவரிடம் போய் தஞ்சம் அடைவாய். அவர் தன் மகனாகிய தட்சனிடம் கூறி சாபத்தை மாற்றுவார்'' என்று இநதிரன் இயம்பினான்.

சந்திரன், இந்திரன் உரைத்தபடி சத்திய லோகம் போய் நான்முகனுடைய பாதத்தில் வீழ்ந்து தனக்குற்ற சாபத்தைக் கூறி ''ஐயனே' தங்கள் மைந்தனிடம் இதை கூறி எனக்குத் தந்த சாபத்தையும், கோபத்தையும் மாற்றி என்னைக் காப்பாற்றுவீராக என்று கூறினான். சந்திரனுடைய அவலநிலையைக் கண்டுஉள்ளம் நொந்த பிரமதேவர் கூறினார்.

''திங்களே! தட்சன் என் மகனாக இருந்தும், வர பலத்தாலும் ஆட்சியின் அகந்தையாலும் என்னைச் சிறிதும் மதிக்கின்றானில்லை. பழைய தட்சன் அல்லன். முன்பே என்னிடம் உபதேசம் பெற்றுத்தான் இந்த ஆட்சியைப் பெற்றான். ஆனால் அவன் இப்போது சிவமூர்த்தியையும் மதியாத மமதையுற்றிருக்கின்றான். அதிகாரச் செருக்கால் தட்சன் தலைநிமிர்ந்து நடக்கின்றான். அவனிடம் இன்சொல் இல்லை. அவன் அகந்தையால் யாரையும் மதிக்கின்றானில்லை. அதனால் அவன் ஆட்சி நிலைபெறாது''

''சந்திரனே! கருணைக் கடலாகிய சிவபெருமான் ஒருவரே உன்னை உய்விக்கவல்லவர். தஞ்சம் புகுந்த மார்க்கண்டேயருக்காக மறலியை மாய்த்த மகாதேவர், அடைக்கலம் புகுந்த அமரர் பொருட்டு ஆலமுண்ட நீலகண்டர், உமாதேவியாருடைய திருவிரல்களில் தோன்றி உலகங்களையழிக்க வந்த கங்கை வெள்ளத்தைக் கண்டு நாங்கள்அஞ்சியபோது கங்காநதியைத் தலையில் தாங்கிக் காத்தருளினவர். சிவபெருமானுடைய பெருமை அளவிடற்கரியது. நீ கயிலாயம் சென்று செஞ்சடைக்கடவுளைத் தஞ்சமடைக'' என்றார்.

சந்திரன் உடனே விரைந்து சென்று கயிலை மலையையடைந்து, திருநந்தி தேவருடைய அனுமதி பெற்று, சிவபெருமானுடைய சேவடியில் வீழ்ந்தான். ''கருணைக் கடலே! தட்சன் தந்த சாபத்தால் கலைகள் தேய்ந்து நிலைகுலைந்தேன். எஞ்சிய கலையும் இன்று அழியும். என் உயிர் ஒழியும், காத்தருள்புரியும்'' என்றான். சிவபெருமான் எஞ்சிய ஒரு கலையை எடுத்துச் சென்னியில் சூடிக்கொண்

டார். அடியில் வீழ்ந்தவனை முடிமேல் வைத்து கருணைபுரிந்தார். ''இந்த ஒரு கலை என்றும்அழியாது. சோமனே! உன் மாமன் தந்த சாபத்தால் தினம் ஒரு கலை தேயும். நம் அருளால் தினம் ஒரு கலை வளரும்'' என்று கூறி அருள் புரிந்தார். இறைவனுடைய கருணையால் ஒருவாறு நிம்மதியடைந்தான்.

சந்திரன் சிவமூர்த்தியால் உய்வுபெற்றதை தட்சன் அறிந்து சீற்றமடைந்தான். ''நான் தந்த சாபத்தை என் தந்தையும் தந்தைக்குத் தந்தையும் நீக்க நினைத்திலர். என்னிடமும் அது பற்றிக் கூற அஞ்சினார்கள். தந்தையும் தாயும் இல்லாத ஒருவனோ சாபத்தைத் தடுப்பது? மிகவும் நன்று. ஐந்தொழிலும் நாம் புரிகின்



றோம் என்ற அகந்தையுற்றான் போலும். தட்சனுக்கு நாம்தானே வரமளித்தோம் என்று எண்ணிய சிவன் என் ஆணையை இகழ்ந்தனன். சிவன செயல் வெறுக்கத் தக்கது'' என்று கூறி வெகுண்டான்.

புலகர் என்ற முனிவர் தட்சனை நோக்கி, ''தட்சப்பிரசாபதியே! சிவபெருமான் கருணைக் கடல், அவர் அடைக்கலம் புகுந்தவரை ஆதரிப்பவர். அதனால்சந்திரனைஆட்கொண்டார். ஆதலால் நீ சிவமூர்த்தியையிகழாதே! சிவமூர்த்தி

தியைப் பகைத்தால் உனக்கு இறுதி நேர்வது உறுதி'' என்றார்.

தட்சன் ''புலகரே! உமது அறிவுரை நன்றாகவுள்ளது. மாலயனாதி வானவர்கள் என் ஏவலின் வழி நின்று பணி புரிகின்றார்கள். பெற்ற வரத்தை சிவனால் மாற்ற முடியுமோ? ஆதலால் சிவன் என்னை என்ன செய்ய இயலும்?'' என்று கூறி நகைத்தான்.

புலகர், ''செம்மலே! ஈசனை இகழ்ந்து உய்ந்தவர் இல்லை. சிவமூர்த்தி உன் சாபத்துக்கு ஒரு மதிப்புக் கொடுத்து நாளுக்கு ஒரு கலை தேயும் என்று தானே கூறியுள்ளார். சிவபெருமான் உனக்கு மருமகனாக வரும் தன்மையுள்ளது.: சாந்தமடைவாய்'' என்றார். தட்சன் சாந்தமடைந்தான்.

திருக்கயிலாய மலையில் சிவபெருமான் வீற்றிருந்தருளினார். உமாதேவியார் இறைவனை யஞ்சலித்து ''உமது தத்துவ நிலையைச் சாற்றியருளும்'' என்று கேட்டார்.

பரமசிவம் ''தேவி! பேரும் குணமும் உருவும் செயலும் இல்லாத நாம் சக்தியால் அருளுருவங் கொண்டு செயல்படுகின்றேன். பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, கிரியாசக்தி ஞானசக்தி என்ற ஐம்பெருஞ் சக்திகளால் ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐம்பெருந்தொழில்களை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுப் புரிகின்றேன்'' என்றார்.

இதனைக் கேட்ட அம்பிகை ''சுவாமி! என்னை உம்முடைய சக்தியென்று கூறுவதால் என்னால்தான் இத்தனையும் நடைபெறுகின்றன'' என்று வியந்து விளம்பினாள். இறைவர் ''தேவி உன்னை நீ வியந்து உரை செய்தாய். ஆனால்நாம் இன்றி எவையும் இயங்கமாட்டா'' என்று கூறி சிவம் தனித்து நின்றது.

அகில உலகங்களும் அசைவற்றுச் சடங்கள் ஆயின. எங்கும் இருள் மூடியது. அப்போது சிவமூர்த்திக்கு ஒரு கணம், உலகங்கட்குப் பல யுகங்கள்.

அம்பிகை அரன் அடியில் வீழ்ந்து, ''எம்பெருமானே! எல்லாம் நீரே என்பதை உணர்ந்தேன். கருணை புரிக'' என்று வேண்டினாள். சிவபெருமான் உருத்திரர்கட்கு முதலில் உணர்வு தந்தருளினார். அவர்கள் திருவிடைமருதூர் வந்து அந்த இருள் சூழ்ந்த இரவில் சோடசகலாப் பிரசாதத்துடன் ஐந்தெழுத்தை ஓதி வில்வம் தும்பை முதலியவைகளால் அர்ச்சித்துசிவபூஜை செய்தார்கள்.

அந்த இரவுதான் சிவராத்திரி என்று வழங்குகின்றது. பதினொரு உருத்திரர்கள் செய்த வழிபாட்டால் சிவமூர்த்தி அருள்புரிய மாலயனாதி வானவரும் சகல உயிர்களும் உணர்வு பெற்றன. உருத்திரர்கள் சிவனிரவில் வழிபட்டோர் எல்லா நலன்களும் எய்தி இன்புறுமாறு இறைவரிடம் வரம் பெற்றார்கள்.

சிவபெருமான் தட்சனுக்குத் தந்த வரத்தை நிறைவேற்றத் திருவுளங் கொண்டு, ''தேவி! உன்னை நீ வியந்ததனால் நாம் விலக அகில உலகங்களும் சடமாய் நின்றன. அப்பாவம் உன்னைத்தான் சாரும். மக்கள் பாவம் மாதாவைத்தானே சேரும். நீ சென்று யமுனா நதியில் வலம்புரிச் சங்கு வடிவில் தவஞ்செய். பின்னர் தட்சனிடம் அவன் தவப்பயனால் வளர்ந்து தவஞ் செய்வாயாக. அப்போது நாம் அங்கு வந்து உன்னைத் திருமணஞ்செய்து அருள்புரிவோம்'' என்று கட்டளையிட்டருளினார்.

எம்பிரானுடைய ஆணையின்படி எம்பிராட்டி அமிழ்தம் போன்ற சுவையுடைய யமுனா நதியில் வேத மூலம் போன்ற ஒரு மலரில் வலம்புரிச்சங்கு வடிவுடன் தவஞ் செய்து கொண்டிருந்தார்.

ஏழு புண்ணியநதிகளில்ஒன்று யமுனை, இது சூரியகுமாரி. காளிந்தி மலையில் தோன்றி வருவதனால் காளிந்தி என்று பேர் பெறும். நீலநிறத்துடன் புவிமகள் அணிந்த நீல மாமணிபோல் ஒடும் பீடு பெற்றது.

ஒரு மாசி மகத்தன்று தட்சன் வேதவல்லியுடன், அயன் முதலிய அமரர் ஆசிகூற யமுனையில் வந்து நீராடினான். அங்கிருந்த வலம்புரியைக் கண்டு வியந்து எடுத்தான். உடனே அது ஒரு பெண்ணுருவாயிற்று. சிவனார் தந்த வரத்தின்படி பராசக்தியே பாவையாக வந்தாள் எனவுணர்ந்தான். வேதவல்லியிடம் தந்தான். அவள் தன் மாளிகைக்குக் கொண்டு போய் தாலாட்டி தாட்சாயணி என்று பெயர் சூட்டினாள். அம்பிகை இனிது வளர்ந்தாள்.

வேதாகமங்கள் யாவும் ஓதாதுணர்ந்த தேவி ஆறு வயது வந்தவுடன், தாய் தந்தையரைப் பார்த்து ''நான் சிவபெருமானுக்கே உரியவள். அவர் என்னைத் திருமணம் புரிவது வேண்டித் தவம் புரிவேன்'' என்றாள்.


அகிலவுலகங்களுக்கும் அன்னையாகிய தேவியை தட்சனும் வேதவல்லியும் தம் புதல்வி யென்று கருதி ஒரு தவக்கூடம் அமைத்து மகளைத் தழுவி உச்சிமோர்ந்து முத்தமிட்டு மகிழ்ந்தார்கள்.

கன்னியர்கள் புடைசூழ தாட்சாயணி தவ நிலையில் நின்றார். பன்னிரு வயதையடைந்தாள்.

சிவபெருமான் தவமறை வேதியர் வடிவில் அங்கு எழுந்தருளினார். தேவி அவரைச் சிவனடியார் என்று கருதி வந்தனை வழிபாடு செய்தாள்.

வேதியராக வந்த விமலர் ''தாட்சாயணீ! நாம் உன்பால் ஒரு பொருளை நாடி வந்தோம்' என்றார்.

தாட்சாயணி ''ஐயனே! உமக்கு என்ன பொருள்.வேண்டும்? கூறும். தரத்தக்கதாயின் தங்கு தடையின்றி தருவேன்'' என்றாள்.



வேதியர் ''மாதர் மணியே! நாம் உன்னைத் திருமணஞ் செய்ய விரும்பி வந்தோம். நீ தடையின்றி விடை கொடு'' என்றார்.

அம்பிகை ''அரகர'' என்று செங்கரத்தால் செவியை மூடி வெகுண்டு, ''வேதியரே! நீ என்ன வார்த்தை புகன்றனை. நான் கயிலை மேவும் கண்ணுதற் கடவுளை வேண்டித் தவம் புரிகின்றேன்'' என்றாள்.

அந்தணர் ''ஆரணங்கே! வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத சிவமூர்த்தி உன் தவத்துக்குத் தோன்றி அருள் புரியமாட்டார். வாழை நாரால் மலையைக் கட்டியிழுக்க முடியுமா?'' என்றார்.

தேவி '' ஐயரே! இறைவர் வரும் பொருட்டு எண்ணற்ற காலம் தவம் புரிவேன். இறைவர் தோன்றாவிடில் சத்தியமாக நான் உயிரை விடுவேன்'' இது சரதம். நீர் இங்கிருத்தல் தகாது. எழுந்து போம்; நீர் பித்தர் போலும்'' என்று கூறிச் சீறினாள். அரனார் அருகு நின்றவர் அறியா வண்ணம் தாட்சாயணிக்கு மட்டும் தம் காட்சியை யருளினார். அம்பிகை அரனார் அடிமலர் மீது வீழ்ந்து, ''கருணாமூர்த்தியே''. உம்மையறியாது இகழ்ந்தேன். என்னை மன்னித்தருளும் என்று தொழுது துதி செய்தாள்.

அருகில் நின்ற பாங்கியர் தட்சனிடம் சென்று தொழுது ''கன்னிமாடத்தில் ஓர் அந்தணன் வந்தான். தாட்சாயணி அவன்மீது காதல் கொண்டிருக்கின்றாள்'' என்று கூறினார்கள். தட்சன் தனது அறிவின் திறத்தால், வந்த அந்தணர் அந்திவண்ணராம் அரனார் எனவுணர்ந்தான்.

தட்சன் தாட்சாயணியம்மையைத் திருமணஞ் செய்து கொடுப்பேன் என்று எண்ணினான். அன்றே நல்ல நாள் என அறிந்தான். தட்சமாபுரியை அலங்கரிக்கச் செய்தான். கன்னிமாடம் போய், இறைவனை இறைஞ்சினான். மாலயனாதி வானவர்கட்கெல்லாம் வருக என்று அழைப்பு அனுப்பினான். மலரில் வண்டு என வானவர்கள் வந்து சூழ்ந்தார்கள்.

வேதவல்லி தாட்சாயணியைத் திருமஞ்சனம் ஆட்டி, அணிகளைப் பூட்டிமணக்கோலம் புனைந்தாள். திருமணப் பீடத்தில் அந்தணராக வந்த அரனாரையும் தாட்சாயணியையும் இருத்தினான். வேதவல்லி பொற்கரத்தில் நீர் விட வேதமந்திரம் கூறி அம்மை கரத்தை ஐயன் கரத்தில் வைத்துக் கன்னிகாதானம் செய்தான். அப்போது அவன் உளத்தில் இறைவன் தன் மருகன், நாம் மாமன் என்று ஒரு தருக்கு உண்டாயிற்று. (தொடரும்)

# புல்லாங்குழல்

—: ஞானச்சேரி ஞானிகள் :—



ஞானச்சேரி ஞானிகள்

புல்லாங்குழல் இறைவன் கையிலே வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு கருவி. சிந்தனையை உற்பத்தி செய்யக்கூடிய ஆயுதத்துக்குக் கருவிஎன்று பெயர். கையிலே உளி வைத்துக் கொண்டிருக்கின்ற தச்சன் மேஜை நாற்காலிகளை உற்பத்திசெய்து விடுகின்றான். இது போல ஆயுதங்களையும் கருவிகளையும் வைத்துக் கொண்டிருக்கின்றவனே இறைவன். திருமால் தனது இரு கரங்களிலே இரண்டு ஆயுதங்களை வைத்துக் கொண்டிருக்கிறான். ஒன்று சக்கரம். மற்றொன்று வலம்புரிச் சங்கு.

காக்கும் கடவுள் என்கின்றவன் உணவு வழங்கும் தன்மையைப் பெற்றிருக்கவேண்டும். அதை உலக மக்களுக்குக் கொடுத்து வெற்றியை எடுத்து ஊதுவதற்கே சங்கு பெருமாளுக்கு ஆயுதமாக ஆகின்றது. சக்கரத்தின் தேவையை சிந்தித்து தெரிந்து கொள்ளுகின்ற உயர்ந்த மக்களே சக்கரத்தை அறிந்து கொள்ளுவார்கள். லேஸர் ஒளிக்கதிர் என்ற விஞ்ஞானப் பெயருக்கு லேஸர் பீம் என்று பெயர். இதை நோயுற்ற நோயாளியின் கண்களுக்கு செலுத்தினால் நல்லது என்பதை மருத்துவரே முதலில் அறிகிறார். நோயைத் தீர்த்துக் கொள்ளுகின்ற நோயாளி விஞ்ஞானக் கதிரின் பயனை, குணமடைந்தவுடன் அறிந்து கொள்ளுகின்றான். இது போல திருமாலின் சக்கரத்தின் பெருமையை அறிந்து கொள்ளுகின்றவர்கள் எப்படியோ அறிந்து கொள்ளுகின்றார்கள். ஆனால் திருமாலின் மற்றொரு வடிவமான கண்ணபிரான் மக்களின் மனதை அறிய வீரும்பினான்.

மனம் இறைவனை அறியவேண்டும் என்பதற்காக புல்லாங்குழல் பிறந்தது. இந்த இசைக் கருவியின் பெருமையை காது இருக்கின்றவர்கள் அனைவரும் சாதாரணமாக அறிவார்கள். இசை, செய்யுள், இலக்கணம் இம் மூன்றிற்கும் ராகம், சாகித்தியம், சுரம் என்று பெயர். இது போல இறைவனை அறிய விரும்புபவர்களுக்கு ஒன்று இரண்டு அல்ல...ஏராளமான சிந்தனை ஞானமும் சிந்தனையும் தேவைப்படுகிறது.

அது போல புல்லாகுழலை அறிய இசை வேண்டுமா? சங்கீதம் என்ற செய்யுள் வேண்டுமா? தாளம் என்ற பூஜை வழிபாடு இவைகள் வேண்டுமா? அல்லது கண்ணன் வேண்டுமா?..என்று யோசித்தான் ஒரு பக்தன். பாமர பக்தன் மனித சமுதாயத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாக முன்னே வந்து நின்றான். இசையை அறிய எனக்கு கண்ணனே போதும் என்றான். இதனால் கிருஷ்ண பக்தி என்பது பிறந்தது.

புரியாத உங்களுக்கு புல்லாங்குழலை புரிய வைக்கின்றேன். இருட்டு இரவிற்கு நல்ல சகுனம். இரவு என்ற காலத்தில் இருட்டு இல்லையென்றால் மனிதவர்க்கம் தூங்கவும் முடியாது. இருட்டின் பெருமை எவருக்கும் தெரியாது. எந்தக் காலத்தில் எது இருக்க வேண்டுமோ அது தோன்றி இருந்தால் அதுவே அந்த காலத்திற்கு நல்ல சகுனம். நல்ல அறிகுறி என்று பெயர். அறிகுறிகளைப் புரிந்து கொண்ட பறவைகள் இரவு வந்தவுடன் கூட்டை அடைந்து விடுகின்றன; தூங்கி விடுகின்றன. பகல் என்ற காலை நேரம் பகற்

காலத்திற்கு நல்ல சகுனம். இவ்வண்ணம் சகுனங்கள் என்ற நிமித்தங்களைப் புரிந்து கொண்டு அனைவரும் பயன் பெறுகின்றனர்.

சகுனங்களை தமிழ் மொழியில் நிமித்தம் எனலாம். நிமித்தத்தை குறிப்பு என்று தெரிந்து கொள்ளுங்கள். குறிப்பு என்பது வெளிப்படையானது. கண்ணுக்கும் தெரியும். கருத்திற்கும் தெரியும். பகல் இரவு மனிதனுக்குப் புரியவில்லையா? அதுபோல கடவுள் புரியவில்லையா? புரியவேண்டும். பக்தி செய்தால் கடவுள் கண்களுக்கும் தெரிவான். கருத்திற்கும் புரிவான். கண்களால் பார்த்துத் தெரிந்து கொள்வதற்குத்திருமால் கண்ணனின் வடிவத்தை எடுத்தான். கருத்திற்கு புரிய கையிலே புல்லாங்குழலை வைத்துக் கொண்டான். கடவுளைத் தரிசித்தவுடன் கோயிலுக்கு சென்றவுடன் பக்தி வருகிறதோ இல்லையோ கண்ணும் கருத்துமாக இருந்தால் முதலில் பக்தி வந்துவிடும். இல்லையேல் கருத்தில் கண் வைத்தால் கடவுளைப் பார்த்து விடலாம். கண்டு பிடித்து விடலாம் என்பதே உண்மை.

இதை எடுத்து இயம்புகின்ற திருமாலின் உருவம் ஒன்று உண்டு. அவர் மனிதனைப் போன்ற உருவில் தனது இரண்டு கைகளால் ஒரு புல்லாங்குழலைப் பிடித்துக் கொண்டு சமுதாயத்திற்கு காட்சி தருவார். இப்படி கண்ணும் கருத்துமாய் மனிதனுக்கு புரிய வைக்கின்ற திருமேனிக்கே ஸ்ரீவேணுகோபால சுவாமி என்று பெயர். கண்ணபிரான் என்று தமிழில் மந்திரம் சொன்னால் தமிழர்களுக்கு அது ஓர் நல் நிமித்தம்.

உற்பத்தியையும் கருத்தையும் ஏறபடுத்தக் கூடியவனே கடவுள். இந்த வகையில் புல்லாங்குழலைக் கையிலே வைத்துக்கொண்டிருக்கக் கூடிய கண்ணபிரான் மனதை உற்பத்தி செய்கிறான். கருத்தைப் படைக்கிறான். மனம் படைப்பு இவை யிரண்டும் சேர்ந்து வெளி வருவதே சங்கீதம்... இசைக்கலை என்று அறியுங்கள். புதிய கருத்து உள்ள ஆயிரக் கணக்கான செய்யுட்கள் தமிழிலே பிறந்தாலும் வடமொழியிலே சுலோகங்கள், கீர்த்தனங்கள் என்று இருந்தாலும் அனைத்தும் கருத்துக்களே.

இதைப் படைக்கின்ற ஆண்டவனுக்கு மனம் வேண்டும். கலைகளின் உருவம் மனம். மனதின் உருவம் மனிதன். மனிதனின் உருவம் கலையைப் படைக்கின்ற கருவி. இசைக்குழல் என்ற புல்லாங்குழலைப்புரிந்து கொள்ளுங்கள். அதைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கின்ற கண்ணபிரானை கவனியுங்கள். படைப்பிற்கும் கருத்திற்கும் உள்ள வித்தியாசம் புரியும். படைப்பும் கருத்தும் ஒன்று என்றும் புரியும். புல்லாங்குழல் கடவுள் தான். கண்ணபிரானும் கடவுள் தான்.

புல்லாங்குழலும் கடவுளும் சேர்ந்த நிலையில் இரண்டும் ஒன்று தான். கண்ணன் மட்டும் கடவுள் என்றாலும் உண்மை. கல்வியும் கடவுள். படைப்பும் கடவுள். இசையும் கடவுள். ராகமும் கடவுள். தாளம் என்ற கணக்கு, சாத்திரம் அனைத்துமே கடவுள்

**திருக்கோயிலின் திருப்படியாக வேண்டும்!**

*அடியாரும் வானவரும்*
*அரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய்க் கிடந்துன்*
*பவளவாய் காண்பேனே!*

—குலசேகராழ்வார்.

என்றாலும் அனைத்தும் உண்மையே உண்மையே என்று தெரிந்து கொள்ளுங்கள். வேணுகோபால சுவாமியை வணங்கி இக்கருத்தை தெரிந்து கொண்டேன்.

புல்லாங்குழல் என்ற இசைக்கருவியில் இருந்த எட்டு துவாரங்கள் என் கருத்தை விருந்தாக்கியது. எட்டு எழுத்துக்களுக்கு எட்டு துவாரங்களா? எண்சாண் உடம்பு என்பதுதான் மனிதனின் உயரத்திற்கு அளவா? படைப்பின் ரகசியம் கல்வியா? கருத்தா? என்றெல்லாம்எண்ணினேன். குழலின் முதல் துவாரத்தை வாயிலே வைத்து ஊதினார் ஒருவர். குழல் ஒலி..இசை பிறக்கப் போகிறது என்ற நல்ல குறிப்பை எடுத்துக் காட்டியது. மொழி பிறக்காத காலத்தில் ஒலியினால் உலகத்தைச் சிறிதளவே உணர்ந்த மனிதன் இன்று வரை மொழி இல்லாமல் உலகத்தை உணர முடியாமல் இருக்கிறான்.

பறவைகளும் மிருகங்களும் ஒலியை வைத்தே வாழ்க்கை நடத்துகின்றன. சைக்கிள் வண்டியின் மணி சத்தத்தைவைத்துக் கொண்டு சாலையில் நகருகின்ற மனிதன் இன்றும் உண்டு. அதுபோல கடவுள் புல்லாங்குழல் இவைகளை வைத்துக் கொண்டு உலகையே பார்க்கின்ற மனிதர்கள் இருக்கின்றார்கள். கடவுளைப் புரிந்து கொள்ள நிறைய பக்தி வேண்டும். இதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ராகம் என்ற இசையை வெளியேகொண்டு வருகின்ற தனித்தனி ஏழுஎழுத்துக்களுக்கு ஏழு சுரங்கள் என்று பெயர். இந்தசப்த சுரங்களுக்கு புல்லாங்குழலில் ஏழுத் துவாரங்களும், மனிதனிடத்திலிருந்து வெளிப்படுகின்ற மனத்திற்கு ஒரு துவாரம்என்றபடி கண்ணனின் குழலில் எட்டுத் துவாரங்கள் இருந்தன. கண்ணன் குழலை வாயில் வைத்து ஊதினான். 'ஏமனிதா! எதற்கும் மனதை வை. உலகத்தில் எல்லாமே முடியும். உன்னால் முடியாதது ஒன்றுமில்லை. அனைத்தும் வெற்றி மயமே. இவ்விடத்தில் சிந்திக்கஒன்றுமே இல்லை' என்பதை எடுத்துக் காட்டுவதே புல்லாங்குழல்.

புள் என்றால் இயற்கையான துவாரத்தை உடைய ஒரு சிறிய மூங்கில் கழி. இதன் ஒலியைக் கேட்டாலும் கண்ணனைக்கண்களால் கண்டாலும் வாழ்க்கைக்கு அது ஒரு நல் நிமித்தமே. புள் என்றால் நிமித்தம். கடவுளும் குழலும் கருத்திற்கும் படைப்பிற்கும் ஒரு நல்ல அறிகுறி. புல்லாங்குழலைக் கையில்வைத்திருக்கும் கண்ணபிரான் மனித குலத்திற்கு ஒரு நல்ல அறிகுறி என எண்ணினேன்; கண்ணனை வணங்கினேன்.

**ஓம் ஞானிகள் ஞானச்சேரி.**

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், ஆளுநர் தோட்டம், சென்னை-600 002

அருள்மிகு

# முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில்

மயிலாப்பூர், சென்னை 4.

## அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா

முண்டகக்கண்ணி முதல்வி திருத்தலம்
கண்டவன் திருவடி கனிந்த பக்தியால்
கொண்டிட உள்ளத்தில் குறையிலா வாழ்வும்
மண்டுபல் வளமும் மகிழ்வுடன் தருவளே!

## வேண்டுகோள்

சீர்மல்கும் தெய்வத் தமிழ் நாட்டின் தலைநகராக விளங்கும் தருமமிகு சென்னை மாநகரில் சைவ, வைணவப் பெரியோர்கள் அவதரித்தும், போற்றிப் பாடப் பெற்ற திருத்தலமுமான திருமயிலையில், அம்பிகை சுயம்பு வடிவாய்த் தானே முளைத்தெழுந்த தலைவியாய் 'முண்டகக்கண்ணி அம்மன்' எனும் திருநாமத்துடன் எழுந்தருளி வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளித்துக் காத்து வருகிறாள்.

இத்திருக்கோயிலின் திருப்பணிகள் இறையுணர்வும், கொடையுள்ளமும் கொண்ட பல பேரன்பர்களால் நிறைவேறி, நிகழும் திருவள்ளுவராண்டு 2023, ஆங்கிரச ஆண்டு, ஆனித் திங்கள் ஏழாம் நாள் 21-6-1992 ஞாயிறன்று காலை 9-45 மணிக்கு மேல் 10-45 மணிக்குள் சிம்ம லக்னத்தில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இம் மகா கும்பாபிஷேகப் பெரு விழாவிற்கு பக்தர்கள் தங்களால் இயன்றதை ரொக்கமாகவோ, பொருளாகவோ வழங்கி, அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் அருள் பெற வேண்டுகிறோம்.

இங்ஙனம்

**தெ. ப. ஏகாம்பரம்,** எம்.ஏ.,
நிர்வாக அதிகாரி

**கு. சிதம்பரம்,** பி.ஏ.,
தக்கார்
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி,
அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்,
மயிலாப்பூர், சென்னை-4.

*நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :*

**நிர்வாக அதிகாரி**
**அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயில்,**
**மயிலாப்பூர், சென்னை-600 004.**
**தொலைபேசி : 848893**

ரூ. 5,000 குறையாமல் நன்கொடை அளிப்போர் பெயர் சலவைக்கல்லில் பொறிக்கப்படும்.

 பதிவு எண் எம். 703



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 13.4.92 தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள் அன்று அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத் திருக் குளத் திருப்பணியைத் துவக்கிவைத்துச் சிறப்பித்தார்கள். வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் அரசுச் செய லாளர் திருமிகு சி. தங்கராசு, ஐ.ஏ.எஸ்., அவர்கள் உடன் உள்ளார்கள்.